## அரசு ஊழியர்

பிப்ரவரி 2019

மலர் : 40 இதழ் : 2

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

### கிழிசல்கள்

ஆரியபட்டா வானத்தைக் கிழித்தது,
அணுகுண்டு சோதனை
பூமியைக் கிழித்தது.

அரைக்கை சட்டைகள்
கிழிந்தது மட்டுமே
மனதில் நிற்கிறது!

பிள்ளை வேண்டாமென்று
கருப்பையைக் கிழித்தார்கள்,
உணவும் எதற்கென்று இனி
இரைப்பையையும் கிழிப்பார்கள்!

எல்லாம் கிழிந்த
எங்கள் தேசத்தில்
வாய் கிழிவது மட்டும்
வகை வகையாயிருக்கும்!

- கந்தர்வன்

## நமது வெற்றி சர்வ நிச்சயம்!

அரசு ஊழியர், ஆசிரியர் பேரமைப்பான ஜாக்டோ-ஜியோ நியாயமான 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த 22.1.2019 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தத்தை தொடங்கியது. இதுவரை இல்லாத அளவுக்கு இப்போராட்டம் எழுச்சியோடும், உணர்வுபூர்வ மாகவும் நடைபெற்றது. ஊழியர்களின் எழுச்சியை கண்ட அரசு அழைத்துப் பேசி கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக, கடுமையான அடக்குமுறையை ஏவியது.

இந்த அடக்குமுறையினால் 1250-க்கும் மேற்பட்டோர் மீது பொய் வழக்கு புனையப் பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 2500-க்கும் மேற்பட்டவர்களுக்கு தற்காலிக பணிநீக்கம் செய்து உத்தரவிட்டது. ஆயிரக்கணக்கான ஊழியர்களுக்கு 17(அ)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டது. போராட்டத்தின் ஒவ்வொரு நாளும் ஐயாயிரத்திற்கும் குறையாத அளவுக்கு மாவட்டங்களில் ஆர்ப்பாட்டமும், மறியலும் நடைபெற்றது.

இதனைத் தாங்கிக் கொள்ளாத காவல் துறை ஊழியர்களிடம் நடந்து கொண்ட அணுகுமுறை மிகவும் மோசமான இருந்தது. காவல் துறையை ஏவிய அரசின் அனைத்து அடக்குமுறைகளையும் தாண்டி மாநிலம் முழுவதும் போராட்டங்கள் வீறுகொண்டு எழுந்தது. பொதுவாக இந்தப் போராட்டத்தை நமது கோரிக்கைகளை பற்றி தவறாக சித்தரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு எதிராக திசை திருப்பப்பட்டது. மாணவர் களுடைய நலனுக்கு எதிரானது எனவும் திசை திருப்பப்பட்டது.

இந்தப் போராட்டத்தின்போது அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், தொழிற் சங்கங்களும் ஆதரவளித்தன. இவ்வளவு அடக்கு முறைக்கு பின்னர் போராட்டத்தின் வீச்சு குறையாத காரணத்தினால் ஆசிரியர்களை பணி மாறுதல் செய்யும் ஒரு தந்திரத்தை அரசு மேற்கொண்டது. இதனை எதிர்கொள்ள முடியாமல் 30.1.2019 அன்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் 90 சதவீதம் பேர் வேலைக்கு திருப்பி விட்டனர்.

முதல்முறையாக இந்திய வரலாற்றில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் நடத்திய இந்த

ஜாக்டோ-ஜியோ போராட்டம் மகத்தான பதிவை செய்திருக்கிறது. அரசு அடக்குமுறைகளை ஏவிவிட்டு பேச்சுவார்த்தைக்கும் அழைக்காமல், போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் ஒரு பயங்கொண்ட தோற்றத்தை உருவாக்கி இனிமேல் இப்படிப்பட்ட போராட்டங்கள் நடத்தக் கூடாது என்று கங்கணம் கட்டியதன் விளைவுதான் கோரிக்கைகள் ஏதும் முடிவுக்கு வராத நிலையில் முதல்வர் மாணவர்கள் நலன் கருதி போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்து அனைவரும் பணிக்கு திரும்புமாறு வேண்டு கோள் விடுத்தார்.

களச்சூழ்நிலையை கருத்தில் கொண்டு மீண்டும் பீனிக்ஸ் பறவைப் போன்று எழுந்து வருவோம். அதற்கான காலஅவகாசத்தை எடுத்துக்கொண்டு இதே அரசிடம் நமது கோரிக்கைகளை வென்றெடுப்போம் என்ற அடிப்படையில் ஜாக்டோ-ஜியோவின் உயர் மட்டக் குழு இவற்றை பரிசீலித்து போராட் டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்தது. களத்திலே கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கக்கூடிய அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களை பாதுகாக்க வேண்டிய கட்டாய கடமை நமக்கு இருக்கின்ற முதல் பணியாகும். அதற்கான அத்துணை முயற்சிகளும் ஜாக்டோ-ஜியோ மேற்கொண்டு வருகிறது.

அடக்குமுறையை ஏவிவிட்டு இந்தப் போராட்டத்தை முடுக்கி விட்டோம் என்று நினைக்கும் இந்த அரசுக்கு சரியான பாடத்தை நாடாளுமன்றத் தேர்தலில் புகட்டுவோம். பொதுவாக ஒரு போராட்டத்தை கையாளும் விதத்தில் கடந்த காலத்தில் அரசு தோல்வியுற்றது. இந்த தோல்வியே நமக்கு வெற்றியாக மாறும்.

தண்டனைக்கு உட்படுத்தி விட்டோம் இனிமேல் எதுவும் செய்ய முடியாது என்று இறுமாப்போடு இருக்கும் அரசுக்கு சமிக்ஞை செய்கிற வகையில் நமது எதிர்காலத் திட்டங்கள் வகுக்கப்படும். போராட்டத்தில் ஈடுபட்டு, தண்டனைக்குட்பட்ட அனைவருக்கும் நெஞ் சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கி றோம். இழப்புகள் அனைத்தும் தற்காலிக மானதுதான்.

ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகளை அழைத்துப் பேசி பிரச்சனைகளை தீர்க்கும் வரை மாநில ஒருங்கிணைப்பாளர்கள் அனைத்து முயற்சி களையும் எடுத்து எந்தவிதமான சேதாரமும் இல்லாமல் அனைவரையும் பணியில் சேர்ப் போம். இந்திய குடியரசு தின வரலாற்றில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை கைது செய்து சிறையிலடைப்பு, நெஞ்சில் மாறாத வடுவை உருவாக்கிய தமிழக அரசின் இத்தகைய அடக்குமுறையினை எதிர்கொண்டு நிச்சயம் வெற்றி பெறுவோம். ஜனநாயக ரீதியில் நடக்கக்கூடிய போராட்டங்கள் வரலாறுகளை பார்த்தோமென்றால் நமது வெற்றி உடனடியானது அல்ல. ஆனால், சர்வ நிச்சயம்.

# துளிப்பா

ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம்
உள்ளே இருக்குமாம் ஈறும்பேனும்
மத்திய பட்ஜெட்

வாராக்கடன் தள்ளுபடி
வருடந்தோறும் கார்ப்பரேட்டுக்கு
இவ்வருடமும் ஏமாற்றம் விவசாயிக்கு

வேலைவாய்ப்பு எதிர்பார்ப்பு
உள்ள வேலையும் பறிப்பு
பபட்ஜெட் படப்பிடிப்பு

ஆண்டுதோறும் கிண்டி
கொடுப்பர் அல்வா
பட்ஜெட் கடப்பர் சாமானியர்

ஊர்தோறும் சிலையில்
தலைவர் தெய்வ நிலையில்
கொள்கை கிடப்பில்

அமரர் ஆட்சி
தொடர்வதாய் கட்சி
பொய்யுரையில் வீழ்ச்சி

கடசித் தலைவரோடு
இறக்கிறது கொள்கை
வழிபாட்டில் தொடர்கிறது கொள்ளை

- **பெரணமல்லூர் சேகரன்**

# அடக்குமுறையை தூளாக்கி எமது வர்க்கப் போராட்டம் தொடரும்!



தமிழக அரசு ஏவியுள்ள அடக்குமுறையை முறியடித்து, நீதி கிடைக்கும் வரை ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் - பணியாளர்களின் போராட்டம் தொடரும் என ஜாக்டோ - ஜியோ தலைவர்கள் எச்சரித்துள்ளனர். சென்னையில் ஞாயிறன்று செய்தியாளர்களை சந்தித்த ஜாக்டோ- ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் மு.அன்பரசன், தியாகராஜன், வெங்கடேசன், சங்கர பெருமாள், தாமோதரன் ஆகியோர், ‘‘எங்களது போராட்டம் வர்க்கப் போராட்டம்; அரசின் அடக்குமுறை, பொய் வழக்குகளை முறியடிப்போம்; கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடர்ந்து போராடுவோம்’’ என்று கூறினர். மேலும் அவர்கள் தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் விரிவான அறிக்கையும் வெளியிட்டனர். அந்த அறிக்கை வருமாறு:

22.01.2019ம் தேதி முதல் நடைபெற்றுவரும் ஜாக்டோ- ஜியோ போராட்டம் நாளுக்குநாள் தீவிரமடைந்து வரும் நிலையில் அரசுத் தரப்பில் அடக்குமுறைகள் ஏவப்படுவதும், புளுகுமூட்டைகள் அவிழ்த்து விடப்படுவதும் அதிகரித்து வருகின்றன.

## ‘தற்காலிக’ ஆசிரியர்கள்

மக்கள் மத்தியில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்-பணியாளர்கள் மீது களங்கம் ஏற்படுத்தும் வகையில் அரசும் அமைச்சர்களும் அறிக்கைகள் விட்ட வண்ணம் உள்ளனர். அமைச்சர் செங்கோட்டையன் தற்காலிக ஆசிரியர்களை ரூ.7500/- சம்பளத்தில் 28ம் தேதி முதல் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று போராட்டத்தில் ஈடுபடும் ஆசிரியர்களை அச்சுறுத்தும் நோக்கில் அறிக்கை விட்டுவிட்டு, ரூ.7500/-க்கு ஆசிரியர்கள் கிடைக்காத நிலையில் அதை இப்போது ரூ.10,000/- கொடுப்பதாக அறிவித்துள்ளார். ரூ.20,000/- சம்பளம் கொடுத்து தற்காலிக ஆசிரியர்களை நியமித்தாலும் அவர்களால் மாணவர்களுக்கு தேர்வுகள் நெருங்கிவரும் நிலையில் தக்க முறையில் பாடங்களை போதிக்க முடியாது என்பதை மாணவர்களும் பெற்றோர்களும் அறிவர். ஆனால் அரசோ ஜாக்டோ- ஜியோ நிர்வாகிகளை நேரடியாக அழைத்துப் பேசுவதை கௌரவப் பிரச்சனையாகப் பார்க்கிறது. அரசாங்கம் அட்வகேட் ஜெனரலின் மகன் மூலம் அரசுப்பள்ளி மாணவனின் கல்வி பாதிக்கப்படுகிறது என்று உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டு போராட்டத்திற்கு தடை வாங்க நினைக்கிறதே தவிர மூன்றுவருடங்களாக போராடுகிற ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் - பணியாளர்களை நேரடியாக அழைத்துப் பேசி உடனடியாக பிரச்சனைகளைத் தீர்க்க நினைக்கவில்லை. மாணவர்களும் பொதுமக்களும் எப்படிப் போனால் என்ன என்று அரசு நினைப்பதன் வெளிப்பாடு இது.

## திடீரென குதிக்கவில்லை

இந்தப் போராட்டத்தில் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் பணியாளர்களும் 22.1.2019ம் தேதி திடீர் என்று குதிக்கவில்லை என்பது பொதுமக்களுக்கும் தெரியும், உயர்நீதிமன்றத்திற்கும் தெரியும், ஆள்பவர்களுக்கும் தெரியும். ஆனால் அமைச்சர்கள் தங்களுக்கு வசதியாக, மாணவர்களின் தேர்வு நேரத்தில் போராட்டம் நடத்தலாமா என்று கேட்கின்றனர். ஏற்கெனவே 4.12.2018 முதல் வேலை நிறுத்தம் அறிவித்தபோது கஜா புயலால் எட்டு மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் வேலை நிறுத்தம் செய்யலாமா என்றார்கள். இவர்களேதான் எந்த பிரச்சனையும் இல்லாத நேரத்தில் போராடச் சென்றபோது கஜானாவில் பணம் இல்லை; அதனால்



நீங்கள் போராட்டம் நடத்தக்கூடாது; பொறுங்கள் என்று காரணம் சொன்னார்கள். ஆக, இந்த அரசுக்கு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பணியாளர்களின் நியாயமான உரிமைகளை தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை என்பது மட்டும் தீர்க்கமாக தெரிகிறது.

## எம்எல்ஏக்களும் ஐஏஎஸ் அதிகாரிகளும்

அரசின் நிதிநிலை மோசமாக உள்ளது; போராட்டம் நடத்த வேண்டாம் என்றும் கோரும் இந்த அரசுதான் நாங்கள் போராடாமல் இருக்க எங்கள் கோரிக்கைகளை பரிசீலியுங்கள் என்று பலமுறை பேசியபோதும் அதைப்பற்றி சிறிதும் கருத்தில் கொள்ளாமல் எம்.எல்.ஏ.க்களுக்கு மட்டும் 110 சதவீத ஊதிய உயர்வு அளித்து அரசாணை வெளியிட்டார்கள். ரூ.50,000/- ஆக இருந்த எம்.எல்.ஏ.சம்பளத்தை ரூ.1,10,000/- ஆக உயர்த்திய போது மட்டும் அரசின் நிதி நிலைமை செழிப்பாக இருந்ததா என்பதை அரசு விளக்க வேண்டும்.

## பயனளிப்பு ஓய்வூதியம் பங்களிப்பு ஓய்வூதியமாக மாறிய பயங்கரம்

முப்பது ஆண்டுகளாக அரசில் பணி செய்யும் அரசு ஊழியர் ஓய்வு பெற்ற பின் வழங்கப்பட்டு வரும் பயனளிப்பு ஓய்வூதியத்தை பங்களிப்பு ஓய்வூதியமாக மாற்றிவிட்ட இவர்கள், ஒருமுறை எம்.எல்.ஏக்களாகவோ எம்.பிக்களாகவோ இருந்துவிட்டால் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் பெறுவதை மட்டும் பங்களிப்பு ஓய்வூதியமாக மாற்றவில்லை. தங்களுக்கு மட்டும் ஊதியத்தை உயர்த்திக் கொண்டும், ஓய்வூதியத்தை நிலைநிறுத்திக் கொண்டும் உள்ள அமைச்சர்களுக்கோ, எம்.எல்.ஏ.க்களுக்கோ அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் வாங்கும் சம்பளம் அதிகம் என்றும், பழைய ஓய்வூதியம் கிடையாது என்றும் எந்த அருகதையில் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. உண்மையில் நிதி பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னால் எம்.எல்.ஏக்களும், எம்.பி.க்களும் தாங்கள் வாங்கும் ஊதியத்தை உயர்த்திக் கேட்டிருக்கக்கூடாது. தங்களுக்கான ஓய்வூதியத்தை கௌரவமாக மறுத்திருக்க வேண்டும். ஆனால் இதையெல்லாம் முதல்வர் உணர்ந்தவராகத் தெரியவில்லை. அவர் மேடைதோறும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ரூ.50000/-க்கு மேல் சம்பளம் பெறுகிறார்கள் என்று பிரச்சாரம் செய்கிறார். ஆட்சியாளர்களைப் போலவே அரசாங்கத்தின் அதிகார வர்க்கமான ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 1.1.2016 முதல் ஊதிய மாற்றங்களையும் அதற்கான ஊதிய நிலுவைத் தொகையையும் ஒரு பைசா குறைவில்லாமல் பெற்றுக்கொண்டு அரசு ஊழியர்கள்-பணியாளர்கள், ஆசிரியர்கள் மட்டும் 1.10.2017முதல் ஊதிய மாற்றத்தைப் பெற வேண்டும் என்றும் ஊதிய மாற்ற நிலுவை கேட்கக்கூடாது என்று கூறுவதற்கு எந்தவித தார்மீக உரிமையும் இல்லாதவர்கள்.

## புளுகுமூட்டை அமைச்சர்

அமைச்சர் ஜெயக்குமார் அறிக்கை விடுகிறார், அம்மா எந்தக் காலத்திலும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப அமல்படுத்துவோம் என்று கூறவில்லை, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து முடிவெடுக்கப்படும் என்றுதான் கூறியுள்ளார் என்று. அவர் 2011ஆம் ஆண்டு அதிமுகவின் தேர்தல் அறிக்கையை கண்ணாடி போட்டு கொஞ்சம் படித்துப் பார்த்திருந்தால் அந்தப் பொய்யான அறிக்கையை விட்டிருக்க மாட்டார். 2011 ஆம் ஆண்டு அதிமுகவின் சட்டமன்றத் தேர்தல் அறிக்கையில் அதிமுக ஆட்சிக்கு வந்தால் புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறப்படும் என்று கூறியதன் பேரிலேயே அதிமுகவிற்கு வாக்களித்த அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் எத்தனை லட்சம் பேர் என்பதையும் அதனால்தான் அம்மையார் ஆட்சிக்கு வரமுடிந்தது என்பதையும் அமைச்சர்களும் அதிமுக அரசும் நினைத்துப் பார்க்க வேண்டும். 2016ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலுக்கு முன்னர் சட்டபேரவை விதி எண் 110ன் கீழ் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப பெறுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய சாந்தா ஷீலா நாயர் தலைமையில் வல்லுநர் குழுவை அமைத்ததால்தான் 2016 தேர்தலிலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் கணிசமான வாக்குகளை பெற்று இன்று ஆட்சிபீடத்தில் உட்கார்ந்து கொண்டு பொய்யான அறிக்கை விடமுடிகிறது என்பதையும் புளுகுமூட்டை அறிக்கை விடும் அமைச்சர் உணர வேண்டும்.ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள்-பணியாளர்கள் இந்த அளவுக்கு ஒன்றுபட மாட்டார்கள், போராட மாட்டார்கள் என்று இதோ அதோ

என்று கூறி மூன்றாண்டுகள் இழுத்தடித்ததைப் போல இனியும் இழுத்தடிக்க முடியாது என்பதை ஆட்சியாளர்கள் இப்போதுதான் உணரத் துவங்கியுள்ளனர் என்பதற்கான ஆதாரம் தான் அமைச்சர் ஜெயக்குமாரின் மிரட்டல் அறிக்கை. நாளுக்குநாள் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் நியாயமான போராட்டத்திற்கு பெருகி வரும் ஆதரவையும் பார்த்து சித்தம் கலங்கிப் போய் அவர் என்னென்னவோ பேசுகிறார். எதிர்க்கட்சியினரின் தூண்டுதலால் தான் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் போராடுகிறார்கள் என்ற அற்பத்தனமான குற்றச்சாட்டையும் அமைச்சர் அடுக்குகிறார்.

## அரசியல் சட்டம் சொல்வது என்ன?

இந்திய அரசியல் சாசனத்தின் பிரிவு-4, அரசுக் கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகளில், பிரிவு 43 தொழிலாளர்களுக்கான வாழ்வூதியம், இன்னபிற, தலைப்பின் கீழ் ஊதிய அமைப்பு குறித்து பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:''இந்திய அரசானது, தகுந்தவாறு சட்டங்கள் இயற்றியோ அல்லது பொருளாதார அமைப்பு மூலமோ, அல்லது வேறு எந்த வழியிலோ எல்லோருக்கும் வேலை, வாழ்க்கை ஊதியம், ஓய்வில் முழு சுகத்தையும் நுகரக்கூடிய வேலை நிலைமை ஆகியவற்றையும் சமூக, கலாச்சார மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பையும் உத்தரவாதப்படுத்த கடும் முயற்சிகளை மேற்கொள்ளும்.'' - இவ்வாறு அரசியல் சாசனத்தில் கூறப்பட்ட 'வாழ்க்கை ஊதியம்' என்பது இன்றுவரை ஒரு தொலைதூரக் கனவாகவே இருந்து வருகிறது.

## நியாய ஊதியம்'

மத்திய அரசால் 1948ல் நியமிக்கப்பட்ட நியாய ஊதியக்குழுவில் 'குறைந்தபட்ச ஊதியம்' என்பது ஊதிய வகைகளுக்குள் அடிமட்டம் என்றும், வாழ்க்கை ஊதியம் என்பது உயர் மட்டம் என்றும், குறைந்தபட்ச ஊதியத்தின் உச்சநிலையும், வாழ்க்கை ஊதியத்தின் அடிமட்ட நிலையும் `நியாய ஊதியம்' என்றும் வரையறுக்கப்பட்டது. ஆனால், இந்த வரையறையும் இதுநாள்வரை வசதியாக கவனத்தில் கொள்ளாமலே விடப்பட்டுள்ளது. எனவே, நியாய ஊதியத்திற்கும் குறைவாக வழங்கப்படும் எந்த ஊதியமும் அநியாய ஊதியமாகவே இருக்கும்.(2013(2) ளஉஉ 516 யீயசய 53)

## முன்மாதிரி முதலாளி

பூபேந்திரநாத் ஹசாரிகா மற்றும் ஒருவர் -எதிர்- அஸ்ஸாம் மாநில அரசு மற்றும் பலர் (2013(2) sec 516 Para 53) என்ற வழக்கில் உச்சநீதிமன்றம் ஒரு நல்லாட்சி அரசாங்கம் அதன் ஊழியர்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூறியுள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்: ''மாநில அரசின் பங்கு என்பது ஊழியர்களைப் பொறுத்தமட்டில் ஒரு முன்மாதிரி முதலாளியாக இருக்க வேண்டும், எதிர்காலத்தில் ஊழியர்களின் உரிமைக் கோரிக்கைகளின் பேரில் சினம் கொள்ளாமல் அது இருக்கும் என்ற எதிர்பார்ப்பையும், பொறுப்பில்லாத அலட்சியப் போக்குடன் பெரிய அளவில் விலகி நின்று வேடிக்கை பார்க்காது என்ற நம்பிக்கையையும் ஊழியர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை அது எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். அவர்களின் நம்பிக்கை நீர்த்துப்போகும் சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடாது. ஒவ்வொரு ஊழியரின் நம்பிக்கையும், மதிப்பும் மகிமையும் வாய்ந்தது. அதை முன்மாதிரி முதலாளியாக இருக்கும் அரசு ஏமாற்றமாகவோ, துரோகமாகவோ மாற்றி அவர்கள் பணியேற்றத்தில் சதுரங்க விளையாட்டு ஆடக்கூடாது. அமைதி உணர்வும், சிரத்தையான நேர்மையும் ஒவ்வொரு நிகழ்விலும் எதிரொலிக்க வேண்டும். நம்பகமான சூழல் நிலவவேண்டும். ஊழியர்கள் அனைவரும் தாங்கள் கண்ணியத்துடனும் நேர்மையாகவும் நடத்தப்படுகிறோம் என்றும் தங்கள் நம்பிக்கைக்கு பங்கம் ஏற்படாது என்றும் நிச்சயமாக நம்ப வேண்டும். அப்போதுதான் நல்லாட்சி என்ற கருத்துப்படிமம் உறுதிப்படும்.''அரசு ஊழியர்கள் அனைவரும் இந்த அரசை மேற்கூறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே நம்பி வருகிறோம். அரசும் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் பரிசீலித்து அவர்களின் கோரிக்கைகளை மொத்தமாக இல்லாவிடினும் கூடுமான அளவில் நிறைவேற்றும் சூழல் ஏற்படவேண்டும் என்று விரும்புகிறோம். அப்போதுதான் அரசு நிர்வாகமும், மக்கள் திட்டப்பணிகளும் தொய்வின்றி நடக்கும், சமூகத்தில் நலமும் வளமும் செழிக்கும்.

## உங்கள் வரலாற்றைத் திரும்பிப் பாருங்கள்

*தற்காலிக ஆசிரியர்களை நியமிப்பதாலோ, போராட்டக்காரர்களை கைது செய்து சிறையில் அடைப்பதாலோ, அவர்கள் மீது துறைவாரியான நடவடிக்கைகள் எடுப்பதாலோ, பொய்யான அறிக்கைகள் விடுவதாலோ, அற்பத்தனமான காரணங்களை சுமத்துவதாலோ கொளுந்துவிட்டு எரியும் ஜாக்டோ- ஜியோ போராட்டத்தை ஒடுக்கிவிடலாம் என்று இந்த அரசு நினைத்தால் அது சிறுபிள்ளைத்தனமான செயலாகும். 2003 ஆம் ஆண்டில் இதே அதிமுக ஆட்சியில் ஜெயலலிதா 1,90,000 அரசு ஊழியர்களை ஒரே அரசாணையில் டிஸ்மிஸ் செய்தபோதும் அஞ்சாமல் நின்றவர்கள்தான் இந்த ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் பணியாளர்களும். அந்த நிகழ்விற்குப் பிறகு அதிமுகவை ஆட்சிக் கட்டிலிலிருந்து அகற்ற இயக்கங்கள் நடத்தி பகை முடிக்கும் பணியைச் செய்ததும் இதே அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும்தான் என்கிற வரலாறை இப்போதிருக்கும் தமிழக முதல்வரும் அமைச்சர்களும் திரும்பிப் பார்த்து தங்களை திருத்திக் கொள்வது நல்லது. நியாயமான முறையில் போராடுபவர்களை நேர்மையான முறையில் அழைத்துப்பேசி பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டிய அரசு தன் கீழ் பணிபுரியும் ஊழியர்களையும் ஆசிரியர்களையும் எதிரிகளைப் போல் பாவிப்பதையும் அடிமைகள் போல் நடத்துவதையும் உடனடியாக கைவிட வேண்டும். வெறும் அறிக்கைகளும், புள்ளி விவரங்களும், மாற்று ஏற்பாடுகளும், அடக்குமுறைகளும், எச்சரிக்கைகளும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள்--பணியாளர்களின் போராட்டத்தை நசுக்கிவிட முடியாது என்பதை இனியாவது உணர்ந்து ஜாக்டோ- ஜியோ ஒருங்கிணைப்பாளர்களை உடனடியாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகளை நிறைவேற்றி பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை உடனடியாகக் களைய தமிழக முதல்வர் முன்வர வேண்டும்.*

## இனி செய்ய வேண்டியது

நம்முடைய போராட்டத்தில் முதல் சுற்று முடிந்திருக்கிறது. அடுத்த சுற்றுக்கு நாம் நம்மை ஆயத்தப் படுத்திக் கொள்ள வேண்டிய சின்ன இடைவெளி இப்போது நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த இடைவெளியில் நாம் நம்முடைய அடுத்தகட்ட போராட்டத்துக்கான அனைத்துப் பணிகளையும் செய்து முடித்துவிட வேணடும். அடுத்த சுற்று என்பது இறுதிச் சுற்றாகக்கூட இருக்கலாம். தேர்வு வந்தாலும் தேர்தல் வந்தாலும் நாம் நமது அரசுப் பணியை ஒழுங்காகச் செய்து கொண்டு உரிமைகளுக்காக போராடிக் கொண்டே இருக்க வேண்டும். போராட்டங்களில் பங்கேற்கும் முதல் தலைமுறை அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அவர்கள் போராட்ட காலத்தில் எப்படி செயல்பட வேண்டும் என்ற தொழிற்சங்கப் பயிற்சியை சங்க முன்னோடிகள் கற்றுக் கொடுக்க வேண்டும்.

சாக்ரடீஸ் என்ற ஒரு மேதையைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் எது சொன்னாலும் சிந்தித்து சரியாகத்தான் சொல்வார் என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு இளைஞன் பலர் இருந்து சபையில் அவர் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் அவரை முட்டாளாக்க வேண்டுமென்று தன் கையில் ஒரு வண்டை மூடிக்கொண்டு சாக்ரடீஸ் அவர்களைப் பார்த்து, “ஐயா என் கைக்குள் இருக்கும் வண்டு உயிருடன் இருக்கிறதா? அல்லது இறந்து விட்டதா?'' என்று கேட்டான். சாக்ரடீஸ் வண்டு இறந்துவிட்டது என்றால் கையைத் திறந்து வண்டு உயிரோடு இருப்பதை காட்டலாம், மாறாக சாக்ரடீஸ், வண்டு உயிருடன் இருக்கிறது என்றால் கைக்குள் இருக்கும் வண்டை நசுக்கிச் சாகடித்துவிட்டுக் காண்பிக்கலாம் என்று எண்ணினான். சாக்ரடீஸ் உதட்டிலிருந்து என்ன வார்த்தைகள் வரப்போகிறது என்று எல்லோரும் ஆர்வத்துடன் பார்த்தார்கள். அவர் சற்றே யோசித்து விட்டு “வண்டு உயிரோடு இருப்பதும் இறந்துபோவதும் உன் கையில் இருக்கிறது'' என்று. அந்த இளைஞன் அந்தப் பதிலைக்கேட்டு தலை குனிந்தான். இதே போல்தான் நமக்கான நியாயமான உரிமைகள் எனும் வண்டை நாம் உயிருடன் காப்பது நம் கைகளில் இருக்கிறது என்பதை நினைவில் வைத்து அடுத்த கட்ட ஆயத்தங்களுக்கு நம்மை அர்ப்பணிப்போம். வெற்றிக்கனி கையில் எட்டும் வரை போராட்டக் கனலை பாதுகாப்போம்.

# என்றென்றும் நினைவிலாடும் மகளிர் தினம்



உலகம் முழுவதும் மகளிர் தினம் கொண்டாடும் நாள். ஆண்டின் ஒவ்வொரு தினமும் ஒன்றுக்காக அடையாளப் படுத்தப்பட்டு கொண்டாடும் தினங்களைப் போல இந்நாளை எடுத்துக் கொள்ள இயலாது.

ரஷ்யப் பெண் தொழிலாளர்கள் "ரொட்டி வேண்டும் சமாதானம் வேண்டும்" என்ற முழக்கத்தோடு வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தார்கள். ஜார் அரசு வீழ்ந்தது. இடைக்காலப் பொறுப்பேற்ற அரசு பெண் வாக்காளர்களுக்கான உரிமையை அறிவித்தது. அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் இன்றைய நாட்காட்டியின் படி மார்ச் 8.

இப்படி மகளிர் தினம் ஒரு உலக நிகழ்வாகப் பதிவானதெனினும் அதன் பின்புலத்தில் சங்கிலித் தொடரான பெண்களின் எழுச்சிமிக்க இயக்கங்கள் உந்துசக்தியாக விளங்கின எனின் மிகையன்று.

1857 மார்ச் 8 அன்று அமெரிக்காவின் நியூயார்க் நகரில் ஆடைகள் தயாரிப்பு தொழிற்சாலைகளில் பணியாற்றிக் கொண்டிருந்த ஏராளமான பெண்கள் வீதிகளில் இறங்கிப் போராடினர்.50 ஆண்டு களுக்குப் பிறகு 1908 மார்ச் 8 அன்று நியூயார்க்கில் 15000 பெண்கள் சாலைகளில் அணிவகுத்துப் போராடினர்.1910ல் டென்மார்க் நாட்டின் கோபன்ஹேகன் நகரில் சோஷலிச அகிலம் அமைப்பின் மாநாடு பெண்கள் தினத்தை உலக அளவில் கடைப்பிடிக்க வேண்டுமெனும் கோரிக்கையை முன்வைத்தது. ஜெர்மன் பெண்ணுரிமைப் போராளி கிளாரா ஜெட்கின் முன்வைத்த கோரிக்கையை அனைத்து நாடுகளின் பிரதிநிதிகளும் வரவேற்க உலகப் பெண்கள் தினம் கடைப்பிடிப்பது மாநாட்டின் அறைகூவல் தீர்மானமானது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க உலகப் பெண்கள் தினத்தில் பெண்ணுரிமைகளின் உண்மை நிலையைப் பரிசீலிக்கையில் முன்னேற வேண்டிய தூரம் வெகு தொலைவிலுள்ளது புலனாகும்.

பெண் பிறப்பது முதல் இறப்பது வரை சவாலாகவே நீடிக்கிறது.அதற்கான போராட் டத்தை அணிதிரட்டப்பட்ட பெண்கள் போராடி வருகின்றனர. அணிதிரட்டப்படாதவர்களையும் அணிதிரட்டிப் போராடி வெற்றி காண வேண்டியது பெண்களின் கடமை மட்டுமன்று. ஒட்டு மொத்த மனித சமூகத்தின் கடமையாகும்.

***பெண்ணடிமை பேசுகிற நாடு<br>பணப்பேய்கள் உலவும் சுடுகாடு<br>முன்னடி வை கம்பீரமோடு-உன்<br>மூச்சையே புயலாய்<br>விடனும் கோபக் குறியோடு<br>உன்னடிமை தீர<br>ஓங்கி வளர்ந்து வா<br>பாரதிக் கவிஞன் பாட்டு பலத்தோடு***

என்னும் நவகவியின் வரிகளின்படி அவலங்களை எதிர்த்துப் போராடவும் பெண்கள் உரிமைகளுக் காகப் போர் பரணி பாடும் மறவர்களாக மகளிர் தினத்தில் உறுதியேற்றல் அவசியம்.அவர்களுடன் இணைந்து ஆண்களும் பெண்ணுரிமைப் போரில் சமரசமற்ற போர் நடத்துவதும் ஆணாதிக்க வேரறுக்க வேண்டியதும் காலதத்தின் கட்டாயம்.

***(சர்வதேச மகளிர் தினம்-மார்ச் 8)***

**- பெரணமல்லூர் சேகரன்**

# அரசு ஊழியர் போராட்டம்

# நீதிமன்றங்கள் நடுநிலை வகிக்க வேண்டும்!

மிகவும் கீழ்நிலை வேலையாக இருந்தாலும், அரசாங்க வேலையே சிறப்பானது மற்றும் பாதுகாப்பானது என்று மக்கள் நினைப்பதற்குக் காரணம், அரசு ஊழியர்கள் ஓய்வுபெற்ற பின் அவர்களுக்கு அரசு வழங்கிய ஓய்வூதியமும், அவர்கள் இறப்புக்குப் பின் அவர்களின் வாழ்க்கைத் துணைக்கு இறப்பு வரை வழங்கிய குடும்ப ஓய்வூதியமும்தான்.

'ஓய்வூதியம் என்பது அரசு ஊழியர்களின் வாழ்வுரிமை என்றும், அவர்கள் செய்த பணியின் பொருட்டு அளிக்கப்படுவது என்றும், இதை 'இனாம்' என்று கருத முடியாது' என்றும் உச்ச நீதிமன்றம் பல தீர்ப்புகளில் கூறியுள்ளது. ஆனால், 01.04.2003 முதல் தமிழக அரசுப் பணியில் சேருபவர்களுக்கு ஓய்வூதியம் இல்லை என அரசு அறிவித்துள்ளது.

இப்போது நடக்கும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் போராட்டத்தின் மையப் பிரச்சினை, மீண்டும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பதே. இந்த நேரத்தில், போராடுபவர்கள் பணியை ஒழுங்காகச் செய்தனரா, இந்த அரசு குறையற்ற அரசா என்பது போன்ற பிரச்சினைகளுக்குள் செல்வது, எதிர்கொள்ளும் பிரச்சினையைத் திசை திருப்புவதாகும்.

## தேர்தல் வாக்குறுதி

ஓய்வூதியத்தை மீட்பதற்காக இவர்கள் பல முறை போராடி வந்ததை ஒட்டி, மறைந்த முதல்வர் ஜெயலலிதா 2016-ம் ஆண்டு சட்ட மன்றத் தேர்தலின்போது, அவர் ஆட்சிக்கு மீண்டும் வந்தால் பழைய ஓய்வூதியத் திட்டத்தை கொண்டுவருவதாக தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றச் சொல்லியே இந்தப் போராட்டம் நடைபெறுகிறது.

இதில் வேடிக்கை என்னவென்றால், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் உண்டு. சட்ட மன்றம் ஐந்து ஆண்டுகள் செயல்படாமல், ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் மட்டுமே செயல்பட்டுக் கலைக்கப்பட்டாலும், அப்போது சட்ட மன்ற உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கும் ஓய்வூதியம் உண்டு.



ஓய்வூதியம் வேண்டும் எனப் போராடும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டும் என உத்தரவிடும் உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் ஓய்வூதியம் உண்டு. அவர்கள் 01.01.2016 முதல் திருத்தப்பட்டு, உயர்த்தப்பட்ட ஊதிய நிலுவைத் தொகையையும், ஓய்வூதியம் பெற்றவர்கள், ஓய்வூதிய நிலுவைத் தொகையையும் பெற்றுக்கொண்டார்கள்.

## அரசின் கருவியல்ல நீதிமன்றம்

அரசு ஊழியர்களோ, ஆசிரியர்களோ, மருத்துவர்களோ, போக்குவரத்துத் தொழிலாளர்களோ என எந்தப் பகுதி போராடினாலும், அப்போதெல்லாம் நீதிமன்றங்கள் அவர்களின் போராட்டத்தை, வேலைநிறுத்தத்தை நிறுத்திக்கொள்ளும்படி உத்தரவிடுவது, அரசுக்கு ஆதரவான நிலையை நீதிமன்றம் எடுப்பதாகாதா? வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு உடனே வேலைக்குத் திரும்ப வேண்டும் என்று உத்தரவிடும் நீதிமன்றங்கள், பறிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை உடனே அளிக்க வேண்டும் என்று ஏன் அரசுக்கு எந்த உத்தரவும் இடவில்லை?

போராடும் ஊழியர்களை எதிர்கொள்ள அரசுக்குப் போதுமான சட்டங்கள் இருக்கும் போது, அவற்றைப் பயன்படுத்தினால் மக்கள் மத்தியில் - குறிப்பாக போராடும் மக்கள் மத்தியில் - அரசுக்கு அவப்பெயர் ஏற்படும் என்பதாலும், அது எதிர்காலத் தேர்தலில் அரசுக்கு எதிராகப் போகும் என்பதாலும், அரசு பல தரப்பு நபர்கள் மூலம் வழக்குகளைப் போட்டு, நீதிமன்றத்தின்

மூலம் அப்போராட்டங்களை எதிர்கொள்ள நினைக்கிறதோ என்கின்ற வலுவான ஐயம் எழுகிறது.

2003-ல் போராடிய அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல லட்சம் பேரை மறைந்த முதல்வர் ஜெயலலிதா, 'அத்தியாவசியப் பணி பராமரிப்புச் சட்ட'த்தின் கீழ் வேலைநீக்கம் செய்தது போன்ற பல அதிகாரங்கள் அரசிடம் இருக்கும்போது, போராட்டத்தில் நீதிமன்றம் தலையிட வேண்டும் என நீதிமன்றத்தில் வழக்குப் போடுவதை ஏற்க முடியாது என்ற நிலைப்பாட்டை நீதிமன்றங்கள் எடுக்க வேண்டும். கடுமையான நடவடிக்கைகளை அரசு எடுத்தால், அதில் தலையிடுமாறு போராடும் ஊழியர்கள் கோரினாலும், அதில் தலையிட நீதிமன்றங்கள் மறுத்து நடுநிலை வகிக்க வேண்டும்.

## இது தொழிலாளர் பிரச்சினை

2003-ல் வேலைநீக்கம் செய்யப்பட்டவர்கள் அனைவருக்கும் மறைந்த முதல்வர் ஜெயலலிதா மீண்டும் பணித் தொடர்ச்சியுடன் வேலை கொடுத்தது மட்டுமன்றி, வேலை நிறுத்த நாட்களுக்கு ஊதியமும் கொடுத்துள்ளார். எனவே, இது முழுக்க முழுக்க அரசுக்கும் அரசு ஊழியர்களுக்கும் இடையே உள்ள பிரச்சினை என்பதும், அதில் எந்தத் தரப்பும் நீதிமன்றத்தைத் தனக்கு ஆதரவாகப் பயன்படுத்த நினைத்தால், அதை ஏற்க முடியாது என்பதும், இம்மாதிரி தருணங்களில் நடுநிலை வகிப்பதே நீதிமன்றங்கள் செய்ய வேண்டியது என்பதும் சரியான நிலையாக இருக்கும்.

ஊழியர்கள் வன்முறையில் ஈடுபட்டாலொழிய ஊழியர்களின் போராட்டத்தில் தலையிடுவதை நீதிமன்றங்கள் தவிர்க்க வேண்டும். அப்படியின்றி வேலைநிறுத்தத்தில் தலையீடு செய்ய முற்பட்டால், நடுநிலையுடன் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு நீதிமன்றங்கள் உள்ளாகும்.

போராட்டங்களை எதிர்த்துப் போடப்படும் மிகப் பெரும்பான்மையான வழக்குகள் அரசியல் சார்பு கொண்டவை. அரசுப் பள்ளியில் 11-ம் வகுப்பு படிக்கும் மாணவன், கல்வி பாதிக்கப் படுவதாக வழக்கு போடுவதற்குப் பின்னால் உள்ள அரசியலைக் காணாமல் இருக்க முடியாது. ஒரு நீதிபதியிடம் போராட்டத்துக்கு எதிரான உத்தரவைப் பெற முடியவில்லை என்றால், மற்றொரு நீதிபதி முன் வேறொரு வழக்கைக் கொண்டுவருவது போன்ற முறைகளுக்குப் பின்னால் உள்ள அரசியலும் மிக மோசமானது.

போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் முதல்வர் உடனே காலதாமதமின்றிப் பேச்சுவார்த்தை நடத்தி, சுமுகமான முடிவை உண்டாக்குவதே சரியான தீர்வாகும்.

- **து.அரிபரந்தாமன்**, நீதிபதி (ஓய்வு),
சென்னை உயர் நீதிமன்றம்.
நன்றி : தி இந்து தமிழ், 30.01.2019

## வாசகர் கடிதம்

அன்று வைத்த வெண்மணி தீ இன்றும் சாதி, மத, பேதமற்றவர்களின் மனதில் அனலாய் உள்ளதை முன் அட்டைப் படம் உணர்த்தியது. தேசத்தை பாதுகாக்கும் கடமையில் நாமும் என்ற கட்டுரையும், பெரணமல்லூர் சேகரனின் 'லெனின் காலத்திய படைப்புகள்' கட்டுரையும் சிறப்பாக இருந்தது. பொதுச் செயலாளர் மேசையிலிருந்து கட்டுரையும், தலையங்கமும் சிறப்பாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

ஜனவரி 2019 மாத இதழின் முன்அட்டை "வெண்மணி தீ", உழைப்பாளர்களின் "அனையா விளக்கு" என்பதையும். பின் அட்டை படங்கள் நமது தோழர்களின் தொடர் நடவடிக்கையையும் காட்டியது. பொதுச்செயலாளர் மேசையிலிருந்து கட்டுரையும், சும்மா கிடைத்ததா? ஊதியமும் பாதுகாப்பான பணிநிலைகளும். . . கட்டுரையும் அனைத்து ஊழியர்கள் கையிலும் மனதிலும் இருக்கவேண்டிய ஒன்று, படித்து தெரிந்து அறிந்து புரிந்து கொண்டவர்கள் போராட்டத்திற்கு அழைக்காமலே வருவார்கள். பொய் முகங்களின் ஆட்சி துடைத்தெரிய நாமும் துணை நிற்போம், வேர்வை சிந்தியவர்கள் வீதிகளில், இரத்தம் உறிஞ்சுபவர்கள் கோட்டைகளில் என்ற நிலை மாற்ற சபதம் ஏற்போம் ஜனநாயகம் காப்போம். தோழர் ஏ.ட்டி.ஏ வின் பள்ளியில் உள்ளவர்களை நினைத்தாலே "புதிய இந்தியா" பயமுறுத்துகிறது. தோழர் எஸ் தமிழ்ச்செல்வியின் "பங்கேற்பாய் தோழி" தோழர்கள் சேகரன், கிருஷ்ணமுர்த்தி கவிதைகள் மற்றும் கட்டுரைகள் அனைத்தும் அருமை, பாராட்டுக்கள்.

- **சி. பாலசுப்ரமணியன்**, நாகப்பட்டினம்.




*அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை முழுமையாக நிரப்பப்பட வேண்டும் உள்ளிட்ட 9 அம்சகோரிக்கைகளை வலியுறுத்தி இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் வடசென்னை, தென்சென்னை மாவட்டக் குழுக்கள் இணைந்து திங்களன்று (ஜனவரி 28) டிஎன்பிஎஸ்சி அலுவலகம் முன்பு முற்றுகை போராட்டம் நடைபெற்றது. போராட்டத்தில் பங்கேற்றவர்கள் அனைவரும் குண்டுகட்டாக கைது செய்யப்பட்டனர்.*

*முற்றுகைபோராட்டத்தில் தலைமை தாங்கிய மாநில செயலாளர் எஸ்.பாலா பேசியதாவது,*

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் தலா 1 கோடியே 30 லட்சம் பேர் படித்து முடித்து வேலை வாய்ப்புக்காக வருகின்றனர். இதற்கேற்ற வகையில் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க மத்திய அரசு முயற்சிக்கவில்லை. மேக் இன் இந்தியா, ஸ்டார்ட் அப் இந்தியா, ஸ்டான்ட் அப் இந்தியா, ஸ்கில் இந்தியா, தொழில் தொடங்க முத்ரா வங்கி திட்டம் என கவர்ச்சிகரமாக பல திட்டங்களை அறிவித்தாலும் உண்மையில் அவை பெரிய அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை. மறுபக்கம் ஓராண்டுக்கு மேலாக காலியாக உள்ள அரசு மற்றும் அரசுதுறை பணியிடங்களை மூடச்சொல்லி மாநிலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்புகிறது மத்திய அரசு. அதே நேரம் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணியமர்த்தும் நடவடிக்கை மூலம் இளைஞர்களை வஞ்சித்து வருகிறது மத்திய அரசு. அகில இந்திய அளவில் ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் வேலைவாய்ப்பு குறித்த விவரங்களை அரசு நிறுவனங்கள் வெளியிடுவது முறையாகும். 2016 மே மாதத்திற்கு பின்னர் எந்தவொரு விவரமும் வெளி யிடப்படுவதில்லை. வேலைவாய்ப்பு தரவில்லை என்பது மட்டுமல்ல அதுகுறித்த உண்மை விவரங் களைக்கூட வெளியிடுவதற்கு மத்திய மோடி அரசு தயாராக இல்லை.

தமிழகத்தில் 2016 மே மாதம் முதல் 2018 மே மாதம் வரை இரண்டு ஆண்டு காலத்தில் அரசு அளித்த வேலைவாய்ப்பின் எண்ணிக்கை 5802 மட்டுமே. தமிழகத்தில் 84 லட்சம் இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக பதிவு செய்து காத்திருக்கும் நிலையில், அரசு வேலைவாய்ப்பை வழங்கும் அளவீடு இவ்வளவு மட்டுமே. தமிழகத்தில் புதிய வேலை வாய்ப்பை உருவாக்குவோம் என்றும், ஆண்டுக்கு ஒரு லட்சம் பேருக்கு வேலை தருவோம் என்றும் கூறி ஆட்சிக்கு வந்த அதிமுக அரசாங்கம் இந்த இரண்டு ஆண்டு காலத்தில் நிறைவேற்றியவை தான் மேலே குறிப்பிட்டுள்ள புள்ளி விபரங்கள் ஆகும். தமிழகத்தில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு

ஊழியர்கள், ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்து வருகின்றது. பணியாற்றக்கூடிய ஊழியர்கள் ஓய்வு பெறக் கூடியதும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான உரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளவில்லை. தற்சமயம் இருக்கிற நிரந்தரப்பணியிடங்களையும் அழிப்பதற்கான அரசாணை 56ஐ பிறப்பித்துள்ளது. அரசு பணிகளை தனியார்மயமாக்குவதற்கும், ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்வதற்கும் அரசாணை வழிவகை செய்கிறது. தற்சமயம் இ சேவை மையம் என்ற பெயரில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மயத்தில் பணியாற்றக்கூடியவர்களுக்கு வேலை பாதுகாப்பு, உரிய ஊதியம், வேலை நேரம் எதுவும் பாதுகாப்பானதாக இல்லை.

அரசுப் பணிகளை மேற்கொள்ளும் போதும் வேலைபாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. தமிழக அரசாங்கம் பல்வேறு கொள்கை அறிக்கைகளை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. ஆனால் இளைஞர்களின் வேலைவாய்ப்பு குறித்த எவ்விதமான புதிய திட்டங்களும் அரசின் சிந்தனையில் இல்லை என்பது வேதனை தரத்தக்கதாகும். தமிழக மக்கள் தொகையில் ஏராளமான ஆற்றலோடும், திறன்களோடும் இருக்கக்கூடிய பெரும்பகுதி இளைஞர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசின் திட்டம் என்ன? என்ற கேள்வி எழுந்துள்ளது.

அரசுத் துறையில் மின்சாரம், போக்குவரத்து, சத்துணவு, டாஸ்மாக், வருவாய்த்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஏராளமான தொகுப்பூதியத்தில் பணியாற்றி வருகின்றனர். இவர்களை நிரந்தரப் படுத்துவதற்கான எவ்விதமான ஏற்பாடும் செய்வதற்கு அரசு தயாராக இல்லை. தமிழக அரசாங்கம் சிறு, குறு தொழில்களை பாதுகாப்பதற்கான முயற்சிகள் எடுக்கவில்லை. பட்டாசு, இன்ஜினியரிங், பனியன், கைத்தறி, சில்லறை வணிகம் உள்ளிட்ட துறைகள் கடுமையாக பாதிப்பை சந்தித்துள்ளன. இதனால் 50 ஆயிரம் தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டு 5 லட்சம் பேர் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர் என சட்டமன்றத்திலேயே துணை முதல்வர் கூறியுள்ளார். அப்படியெனில் உண்மை நிலவரம் எந்த அளவிற்கு மோசமானதாக இருக்கும் என்பதை உணர வேண்டியுள்ளது.

மூடப்பட்ட தொழிற்சாலைகளை திறப்பதற்கும், சிறு, குறு தொழில்களை பாதுகாக்கவும் தமிழக அரசு முயற்சி எடுக்கத் தவறிவிட்டது என்று இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் சுட்டிக்காட்டுகிறது. தமிழகத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்று முடிந்துள்ளது. இதில் 3,43,100 கோடி ரூபாய் முதலீடு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் 98 நிறுவனங்களிடம் 2,42,160 கோடி ரூபாய்க்கு முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாக பரப்பரப்பாக பத்திரிகைகளில் செய்திகள் வந்தன ஆனால் 71 நிறுவனங்கள் 67,367 கோடி அளவுக்குத்தான் முதலீடுகள் செய்துள்ளன என பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. எத்தனை தொழிற்சாலைகள் துவக்கப்பட்டது? அதற்கு வழங்கப்பட்ட உள்கட்டமைபு வசதிகள் என்ன? எத்தனை வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டது? போன்ற எந்த விவரத்தையும் அரசு அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை.

ரயில்வே உள்ளிட்ட அரசுத் துறைகளில் காலியாகவுள்ள பணியிடங்களில் ஓய்வு பெற்றவர்களை மீண்டும் பணியமர்த்தும் உத்தரவை ரத்து செய்யவேண்டும், அரசுப் பணியிடங்களை ஒழிக்கும் அரசாணை 56-ஐ உடனடியாக ரத்து ரத்து செய்ய வேண்டும், தனியார் துறையிலும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும்,வளங்களைப் பயன்படுத்தி புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும், பணியிடங்களில் விசாகா கமிட்டி அமைத்து பெண்களின் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த வேண்டும், தனியார் துறையில் மாதச் சம்பளம் குறைந்தபட்சம் ரூ. 20,000 வழங்க வேண்டும், சிறு தொழிலை பாதுகாத்திடு, கான்ராக்ட், கேசுவல் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும், ஐடி உள்ளிட்ட அனைத்து சேவை துறைகளிலும் பாதுகாப்பான வேலையை உத்தரவாதப்படுத்த வேண்டும், என்று கூறிய பாலா இந்தப் போராட்டம் ஜனவரி 29, 30 தேதிகளில் தொடரும் என்றார். மேலும் தமிழகத்தின் தற்போது நடைபெற்று வரும் ஜாக்டோ-ஜியோ போராட்டத்தை வாலிபர் சங்கம் முழுமையாக ஆதரிப்பதாகவும் அதற்கான இயக்கத்தை தொடர்ந்து நடத்துவோம் என்று கூறினார். இதில் மாநில துணை தலைவர் கே.எஸ்.கார்த்திக், மாநில துணை செயலாளர் சுசீந்திரா, தென் சென்னை மாவட்ட தலைவர் சுரேஷ், செயலாளர் ப.ஆறுமுகம், வட சென்னை மாவட்ட செயலாளர் சரவணத்தமிழன், பொருளாளர் எஸ்.மஞ்சுளா உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று கைதாகினர். ◣

**இரத்ததானம் செய்வோம் உயிர்களை காப்போம்!**

# நாடாளுமன்ற தேர்தலில் ஆட்சியாளர்களுக்கு பாடம் புகட்டுவோம்: ஜாக்டோ ஜியோ தலைவர்கள் சூளுரை

துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளோடு இணைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ சார்பில் மாநிலம் முழுவதும் வட்ட, ஊராட்சி, மாவட்ட தலைநகரங்களில் ஜனவரி 23 சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக சென்னை மாநகராட்சி அருகே மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சாந்தகுமார் தலைமையில் சாலை மறியல் நடைபெற்றது. இதில் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மு.அன்பரசு, அ.மாயவன், எஸ்.சங்கர்பெருமாள், ந.ரங்கராஜன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ச.டேனியல் ஜெயசிங், வெங்கடேசன், சத்தியநாதன், ஜெ.பட்டாபி, அந்தோணி, சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.சுந்தரம்மாள், அருணா (ஆசிரியர் சங்கம்), டெய்சி (ஐசிடிஎஸ்), ஸ்ரீனிவாசலு, சிவா (செங்கொடி சங்கம்) மற்றும் ஏராளமான அனைத்துத் துறையைச் சேர்ந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாநகராட்சி ஊழியர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோரை காவல் துறையினர் கைது செய்தனர்.

இதுகுறித்து மாநில ஒருங்கிணைப்பாளர் ரங்கராஜன், மு.அன்பரசு ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

3,500 துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளோடு இணைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும் உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 10 லட்சத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். வாழ்வாதார பிரச்சினையான பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய முறை தொடர வேண்டும், இதற்காக அமைக்கப்பட்ட குழுவினுடைய அறிக்கை வெறும் காகித அறிக்கையாக இருந்து கொண்டிருக்கிறது. இடைநிலை ஆசிரியர்களுக்கு 6ஆவது, 7ஆவது ஊதியக் குழுவில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. குறைந்தபட்சம் 15,000 அடிப்படை ஊதியத்தில் இழப்பீடு ஏற்பட்டிருக் கிறது. சித்திக் குழுவினுடைய அறிக்கையில் இந்த இழப்பீட்டை சரி செய்வதற்குரிய சாராம்சம் இல்லாமல் நீதிமன்றத்திலே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முதுகலை ஆசிரியர்கள், அரசு பணியாளர்கள், அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறைகளிலுள்ள ஊதிய முரண்பாட்டை களைய வேண்டும். 21 மாத ஊதிய நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும். மதிப்பூதியம், தொகுப் பூதியம், தினக்கூலி பெறக்கூடிய ஊழியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை யில்லாமல் அவதிப்பட்டு நிலையில், தற்போது இயற்றியுள்ள இளைஞர்களின் வேலைவாய்ப்பை பறிக்கும் அரசாணை எண் 56, 100, 101ஐ ரத்து செய்ய வேண்டும். 3,500 துவக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலை மேல்நிலைப் பள்ளிகளோடு இணைப்பதால் தொடக்க கல்வி நிர்வாகமே இல்லாத நிலையை ஏற்படுத்தும் முயற்சியில் பள்ளிக் கல்வித்துறை ஈடுபட்டு வருகிறது. எனவே பள்ளிகளை இணைக்கும் திட்டத்தை அரசு கைவிட வேண்டும்.

நிதி பற்றாக் குறை என அரசு கூறுகிறது. இதுவரை 6 லட்சத்து 12 ஆயிரம் பேர் செலுத்தி யுள்ள தொகை 25 ஆயிரம் கோடி ரூபாய். அதைத்தான் கேட்கிறோம். அரசினுடைய பங்களிப்பு 25 ஆயிரம் கோடி ரூபாய். அந்த பணம் எங்கே போனது? நிதித்துறை செயலாளர், அமைச்சர் ஜெயக்குமார், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்யநாதன் ஆகியோரிடம் கேட்டால் இருக்கிறது என்று மட்டும் கூறுகிறார்கள். எங்கே இருக்கிறது என்று கேட்டால் அதற்கு பதில் இல்லை.

21 மாத நிலுவை 50 ஆயிரம் கோடி ரூபாய். 50 ஆயிரம் கோடி ரூபாய் எங்கே இருக்கிறது எனக் கூறத் தயாரா? 2 விழுக்காடு ஊதியம் உயர்ந்தால் அரசுக்கு கூடுதல் செலவீனம் எனக் கூறும் அரசு, எம்.எல்.ஏக்கள் ஊதியத்தை இரண்டு மடங்காக உயர்த்திய போது அரசுக்கு எவ்வளவு கூடுதல் செலவு என அறிவித்தீர்களா? எம்.எல்.ஏக்களின் ஓய்வூதியத்தை இரட்டிப்பாக்கிய போது அதனால் அரசுக்கு இவ்வளவு கூடுதல் செலவு என தகவல் வெளியிட்டீர்களா? எனவே மேற்கண்ட கோரிக்கைகளை அரசு உடனடியாக ஜாக்டோ

ஜியோ நிர்வாகிகளை அழைத்துப் பேசி தீர்வு காண வேண்டும். இல்லையென்றால் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சியளர்களுக்கு தக்க பாடம் புகட்டுவோம். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## சென்னை 23.1.2019-ல் போராட்டம்

அதன் ஒரு பகுதியாக சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சத்தியநாதன் தலைமையில் சாலை மறியல் நடைபெற்றது. இதில் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் எஸ்.சங்கர்பெருமாள், ஆறுமுகம், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ச.டேனியல்ஜெயசிங், வெங்கடேசன், சாந்தகுமார், ஜெ.பட்டாபி, அந்தோணி, புகழேந்தி, சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.சுந்தரம்மாள், அருணா (ஆசிரியர் சங்கம்), டெய்சி (ஐசிடிஎஸ்) மற்றும் ஏராளமான அனைத்துத் துறையைச் சேர்ந்த அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாநகராட்சி ஊழியர்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோரை காவல் துறையினர் கைது செய்தனர்.

இதுகுறித்து ஆறுமுகம் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கடந்த 2 ஆண்டுகளாக ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பலகட்ட போராட்டங்களை நடத்தியும் அரசு சுமூக தீர்வு காணவில்லை. இரண்டு முறை அரசு பேச்சுவார்த்தை நடத்தியது. ஆனால் ஒரு கோரிக்கையை கூட அரசு நிறைவேற்றவில்லை. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா நாங்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்து வோம் என தேர்தல் வாக்குறுத்தி அளித்திருந்தார். ஆனால் அவரின் பெயரிலே ஆட்சி நடத்துகிறோம் எனக் கூறும் எடப்பாடி பழனிச்சாமி அரசு அதைகூட நிறைவேற்ற முன்வரவில்லை.

நீதிமன்றம் 3 முறை அரசுக்கு வாய்ப்பு கொடுத்தும்கூட இந்த அரசு எந்த கோரிக்கையையும் நிறைவேற்றவில்லை. வேறு வழியில்லாமல் வேலை நிறுத்தப் போராட்டத் தில் ஈடுபட்டுள்ளோம்.

7ஆவது ஊதியக் குழுவில் அறிவிக்கப்பட்ட சம்பள உயர்வின்படி நிலுவைத் தொகை என்பது அனைத்து துறையை சேர்ந்தவர்களும் வாங்கி விட்டார்கள். ஆனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 21 மாத நிலுவைத் தொகை வழங்கப்படவில்லை. இடைநிலை ஆசிரியர்கள், சத்துணவுப் பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு தொகுப்பு ஊதியத்துக்கு பதிலாக காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். இதை எல்லாம் இந்த அரசு செய்யவில்லை.

5 ஆண்டுகள் பதவி உரிமை வழங்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் உத்திரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் 35 ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர், அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் இல்லை என்று கூறுவதை ஏற்க முடியாது. புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்தினால்தான் 13 லட்சம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பாதுகாக்கப்படு வார்கள்.

புதன்கிழமை கைது செய்யப்பட்டவர்களை அச்சுறுத்தும் விதமாக வழக்கத்திற்கு மாறாக 7 மணிக்கு 8 மணிக்கு விடுதலை செய்யுதுள்ளனர். அனைவரையும் கைது செய்து சிறையில் அடைத்தால் கூட நாங்கள் அஞ்சமாட்டோம். 1985இல் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த போது 44 நாட்கள் போராட்டம் நடத்தினோம். 1988இல் அலெக்சாண்டாரை எதிர்த்து 31 நாட்கள் போராட்டம் நடத்தியுள்ளோம். 2003இல் முதல்வராக இருந்த ஜெயலலிதா ஆட்சியில் எஸ்மா, டெஸ்மாவை சந்தித்தவர்கள்.

2004இல் ஆட்சியில் இருந்தவர்கள் படுதோல்வி அடைந்ததை மறந்து விடக் கூடாது. அதே நிகழ்வை 2019இல் சந்திப்பீர்கள். இடைநிலை ஆசிரியர்கள் எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்புகளுக்கு பாடம் நடத்தினால் என்ன என பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் கேட்கிறார்கள். பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைக் அலுவலர் ஒரு சிறிய கிராமத்தில் 6 மாதம் அலுவலராக பணியாற்ற முடியுமா? எனவே எல்.கே.ஜி., யு.கே.ஜி. வகுப்புகளுக்கு இடைநிலை ஆசிரியர் களை நியமணம் செய்வதை கைவிட வேண்டும். கல்வித் துறையை தனியார்மயமாக்கும் முயற்சியில் அரசும், பள்ளிக் கல்வித் துறையும் ஈடுபட்டுள்ளது. அரசின் எஸ்மா, டெஸ்மா இதற்கெல்லாம் அரசு ஊழியர்களும், ஆசிரியர் களும் அஞ்ச மாட்டார்கள். அரசு உடனடியாக ஜாக்டோ ஜியோ நிர்வாகிகளை அழைத்துப் பேசி கோரிக்கைகளை சுமூகமாக பேசித் தீர்க்க முன்வர

வேண்டும். இல்லையென்றால் எங்களின் போராட்டம் தீவிரமடையும். இவ்வாறு அவர் கூறினார்.

## திண்டுக்கல்லில் 7 ஆயிரம் பேர் கைது

திண்டுக்கல் மாவட்டத்தில் 3ம் நாளாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட ஆசிரியர் அரசு ஊழியர்கள் திண்டுக்கல்லில் பேருந்து நிலையம் முன்பாக உள்ள எம்.ஜி.ஆர் சிலை முன்பாக 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் பங்கேற்று கைதானார்கள். இன்றைய போராட்டத்தில் தனியார் பள்ளி ஆசிரியர்களும் முழுமையாக பங்கேற்றனர். இதனால் போராட்டத்தின் வீச்சு அதிகரித்தது. முதன்மை கல்வி அலுவலகத்தில் பணியாற்றும் பணியாளர்களும் இந்த போராட்டத்தில் பங்கேற்றனர். பழனி கல்வி மாவட்டத்தில் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கழக ஆசிரியர்கள் பங்கேற்றனர். இரவோடு இரவாக பள்ளியின் சாவியை மாவட்ட கல்வி அதிகாரியிடம் ஒப்படைத்து விட்டனர். ஜாக்டோ ஜியோ அமைப்பின் மாநில உயர்மட்டக்குழு தலைவர்களுள் ஒருவரான பேட்ரிக்ரெய்மான் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

ஒரு ஆசிரியர் சட்டமன்ற உறுப்பினராக முடியும். ஆனால் முதலமைச்சர் ஆசிரியராக முடியாது. ஏன் எனில் அதற்கு 10ம் வகுப்பு படித்திருக்க வேண்டும்.அப்படியே பத்தாம் வகுப்பு படித்திருந்தாலும் ஆசிரியர் தகுதி தேர்வு எழுத வேண்டும். 21 மாத கால நிலுவைத் தொகை என்னவானது என்று நீதிபதி கேட்கும் கேள்விகளுக்கு அரசிடம் எந்த பதிலும் இல்லை. தமிழகத்தில் ஊதிய முரண்பாடு என்பது மலைக்கும் மடுவுக்குமான இடைவெளியாகும். எங்களுக்கு வழங்க வேண்டிய ரூ.25 ஆயிரம் கோடி எங்கே உள்ளது. ஏன் வழங்கவில்லை என்பதை அரசு தெளிவு படுத்தவில்லை என்றால் எங்களது போராட்டத்தை கைவிட போவதில்லை என்று பேட்ரிக்ரெய்மான் பேசினார்.

## தருமபுரி

ஜாக்டோ -ஜியோ சார்பில் தருமபுரி தொலைபேசி நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்ட தலைவர் பி.எம்.கௌரன் தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் பொன்.ரத்தினம், தமிழக ஆசிரியர் கழக மாநில அமைப்பு செயலாளர் இராசா. ஆனந்தன், தமிழ்நாடு அரசு பணியாளர் சங்க மாவட்ட தலைவர் கே.பாஸ்கரன், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டதலைவர் எம்.பழனி ஆகியோர் தலைமை வகித்து பேசினார்.

அரசு ஊழியர் சங்க மாவட்டசெயலாளர் ஏ.சேகர் பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு, சத்துணவு ஊழியர் சங்க மாவட்டதலைவர் சி.எம்.நெடுஞ் செழியன், அங்கன்வாடி ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ஏ.தெய்வாணை, உள்ளிட்ட பலர் பேசினர்.

3500 தொடக்கப்பள்ளிகளை உயர்நிலை மேல்நிலைப்பள்ளிகளுடன் இணைப்பதன் மூலம் தொடக்க கல்விக்கு மூடுவிழா நடத்துவதை கண்டித்தும், 3500 சத்துணவு மையங்கள் மூடுவதை கண்டித்தும், எல்.கே.ஜி., யூ.கே.ஜி வகுப்புகளில் இடைநிலை ஆசிரியர்களை பணி அமர்த்துவதை கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## தஞ்சை

ஜாக்டோ-ஜியோ சார்பில் 3500 தொடக்கப் பள்ளிகளை உயர் நிலை / மேல்நிலைப் பள்ளிகளுடன் இணைப்பதையும், 3500 சத்துணவு மையங்களை முடுவதையும் கண்டித்து 18.01.2019 அன்று தஞ்சையில் மாவட்ட அளவில் ஆர்ப்பாட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரெங்கசாமி தலைமையில் நடைபெற்றது.இந்த ஆர்ப்பாட்டத்தில் பல்வேறு ஆசிரியர் மற்றும் துறைவாரிச் சங்க பொறுப்பாளர்கள் கண்டன உரை நிகழ்த்தினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் 900 ஆசிரியர்கள் 250 அரசு ஊழியர்கள் என மொத்தம் 1150 பேர் கலந்து கொண்டனர்.

## நாகை

30.1.2019 அன்று நாகை மாவட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு வேலைநிறுத்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட நிர்வாகி ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்ட ஒருங்கிணைப் பாளர்கள் பா.ரவி, மு.லெட்சுமி நாராயணன், வெ.சரவணன் ஆகியோர் தலைமையேற்றனர். மாவட்ட நிதிக்காப்பாளர் எம்.காந்தி, மாவட்ட துணைத்தலைவர் எஸ்.ஜோதிமணி, தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின்

மாவட்டச் செயலாளர் ப.பார்த்தசாரதி, தமிழக ஆசிரியர் கூட்டணியின் மாவட்டச் செயலாளர் புயல்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அரசு ஊழியர் சங்க மாவட்ட பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார்.

**நாகை**

18.01.19 நாகப்பட்டினம் அவுரித்திடலில், நாகை மாவட்ட ஜாக்டோ - ஜியோ சார்பில் மாலை நேர ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்வேறு துறைவாரி சங்க நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

**சேலம்**

மேட்டூர் வட்டக் கிளை சார்பில் 22.1.2019 அன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு பிரான்சிஸ் ஆரோக்கியம் வரவேற்றார். ஜான்பிரேம்குமார் துவக்கவுரை யாற்றினார். பிரபு, கலையரசன், அலெக்ஸ், வெற்றிவேல், சுரேஷ்குமார், அத்தியண்ணன், சிவக்குமார், சங்கர், கோவிந்தன், சண்முகம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். எஸ்.ஏ.செய்யது உசேன் சிறப்புரையாற்றினார். கு.பாரி நிறைவுரை யாற்றினார். து.வளர்மதி நன்றி கூறினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் பங்கேற்றனர். ◣

## நமது வெற்றி எட்டும் தூரமே

காரணம் காண்பாய் தோழியே
தோழியே - உன் மனதில்
ஹிட்லரின் ஆத்மா
கைதட்டி சிரிப்பதாக
மாயத் தோற்றம் உருவாக்கப்பட்டுள்ளதா?

தெரசாவின் ஆத்மா
உள்ளுக்குள் அழுவதாக
தொலைதூரத்தில் தெரிகின்றதா?
காரணம் - ஜேக்டோ-ஜியோவின்
காலவரையற்ற போராட்டமும் - அதன்
தன்னெழுச்சியும் - அதனால் காவல் துறையின்
அடக்குமுறைகளால் மட்டுமே
முசோலியின் கல்லறை
கொண்டாடி திளைப்பதாக - சில
ஊடகங்கள் சொல்கின்றதா?

காந்தியின் கல்லறை
கண்ணீரால் இளைத்ததாக - உன்னிடத்தில்
குறுஞ்செய்திகள் சொல்கின்றதா?
காரணம் - அது காவிகளின் களியாட்டம்
எல்லை மீறியுள்ளதால் வந்த தற்காலிகமே
நீரோ மன்னனின் பிடில்
ஆனந்தத்தல் இசைப்பதாக - அரசு
தம்பட்டம் அடிக்கின்றதா?

பல பிரிவின் வழக்குகளால் - பாரம் தாங்காது
நாம் வளைந்து விட்டதாய் - அரசு
கற்பனை கனவு காண்கிறதா?
காரணம் - ஜேக்டோ-ஜியோவின் பேரெழுச்சி
தற்காலிகமாய் போதி மரத்திற்கு காய்ச்சல்
தலைமைச் செயலாளர் என் கழுமரத்திற்கு
சொல்லெண்ணா மகசூல் என்ற மாயை
காரணம் - ஜேக்டோ-ஜியோவை
ஒடுக்க நினைக்கும் வக்கிரப் போர்
பெண் அரசு ஆசிரியர்களின்
தன்னெழுச்சியான உக்கிரப் போரிலே
தமிழக அரசு திண்டாடி - ஒடுக்குவதற்கு
தீட்டிய காகித ஆயுதத்திலே
தற்போது மகிழ்ந்து கூத்தாடுகிறது
காரணம் - அதிகாரம் என்ற மமதை

அன்பு தோழியே - நாம்
வானை நோக்கி உயர்த்திய
வளை கரங்களால் - போராட்டத்தை
வசப்படுத்தினோம் - தற்போது
நமது கரங்களை மேலும் வலுப்படுத்த
நம்மை பழக்கிக் கொள்வோம்
காரணம் - கடந்த காலம் விட
போராட்டத்தின் வலிதனை உணர்ந்துள்ளோம்
இயக்கப் பாதையில் துணிந்தும் உள்ளோம்

நெருங்கி விட்டோம்
தோழியே அச்சம் வேண்டாம்
சிபிஎஸ் என்ற கொடூரனை அழிக்க - நாம்
வெடிக்கும் ஆதிக்க தீபாவளி என்ற
தேர்தல் களத்திற்கு தயாராவோம்
காரணம் - நமது வெற்றி எட்டும் தூரமே
காரணம் காண்பாய் தோழியே.

- **எஸ்.தமிழ்ச்செல்வி**

# கஜா புயல் பாதிப்பு நாகை மாவட்ட அரசு ஊழியர் சங்கம் சார்பில் ரூ.20 லட்சம் மதிப்பிலான நிவாரணம்

கஜா புயலால் தன் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் தனது ஒருநாள் ஊதியத்தை வழங்கியதோடு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர் மற்றும் நாகை மாவட்ட மக்களுக்கு தமிழகத்தின் அரசு ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட ஒரு கோடி



ரூபாய் மதிப்பிற்கும் மேற்பட்ட நிவாரன உதவிகள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் வழங்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் மட்டும் இருபது லச்ச ரூபாய் மதிப்பிலான நிவாரனப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் விழுப்புரம், வேலூர், கடலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட நிவாரணப் பொருட்களின் பகுதியாக

நெடுஞ்சாலைத்துறை நாகப்பட்டினம் கோட்டப் பொறியாளர் திரு ஜெ. இளம்வழுதி அவர்கள் கஜா புயல் பாதித்த பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளில் உள்ள மரங்களும் சாய்ந்துவிட்டதால் புளிய மரக்கன்றுகளை அரசு ஊழியர் சங்கம் வழங்கினால் அதனை பராமரித்து வளர்க்கும் பணியை நெடுஞ்சாலைத்துறை ஊழியர்கள் மேற்கொள்வார்கள் என அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் ஆகியோரிடம் வேண்டுகோள் வைத்ததன் அடிப்படையில் மாநில பொதுச்செயலாளர் மு.அன்பரசு மற்றும் மாநிலச் செயலாளர் எம்.சௌந்தர்ராஜன் ஆகியோரின் ஆலோசனை யைப் பெற்று அதற்கான ஏற்பாடுகளை அரசு ஊழியர் சங்க மாவட்ட நிர்வாகிகள் செய்தனர்.

அதன்படி, 1000 புளிமரக் கன்றுகளை நெடுஞ்சாலைத்துறை நாகை கோட்டப்



பொறியாளர் ஜெ. இளம்வழுதி அவர்களிடம் அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் மற்றும் முன்னாள் மாநில துணைத் தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் வழங்கினார்.

நிகழ்வில் அரசு ஊழியர் சங்க நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், இணைச் செயலாளர் மோகன், ஓய்வூதியர் சங்க நாகை வட்டச் செயலாளர் என்.பாபுராஜ், ஓய்வுபெற்ற உதவி கோட்டப் பொறியாளர் கே.குகன் ஆகியோர் உடன் இருந்தனர். அரசு ஊழியர் சங்க முயற்சிக்கு கோட்டப் பொறியாளர் ஜெ.இளம்வழுதி நன்றி கூறினார்.

நாகை மாவட்டம் காமேஸ்வரம் பகுதியில் தென்னை, நெல்லி, புளி, பலா மற்றும் எலுமிச்சை மரக்கன்றுகள் ரூபாய் ஒரு லட்சம் மதிப்பில் இன்று அரசு ஊழியர் சங்கம் சார்பில் வழங்கப்பட்டது.

அரசு ஊழியர் சங்க மாநிலச் செயலாளர் எம்.சௌந்தரராஜன் தலைமையில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

நிகழ்வுகளில் அரசு ஊழியர் சங்க மாவட்டத்தலைவர் ப.அந்துவன் சேரல், மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், மாவட்டப் பொருளாளர் பா.ராணி, நாகை வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், முன்னாள் மாநில துணைத்தலைவர் சு.சிவகுமார் ஆகியோர் பங்கேற்று மரக்கன்றுகளை வழங்கினர்.

காமேஸ்வரம் பகுதியை சொந்த ஊராகக் கொண்ட தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க மாவட்ட இணைச் செயலாளர் ஆதி.உதயகுமார் அரசு ஊழியர் சங்க முயற்சிக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

காமேஸ்வரம் பகுதி மக்களும் மனம் நெகிழ்ந்து நன்றியை தெரிவித்தனர்.

# தருமபுரி பொங்கல் போனஸ் வழங்க வலியுறுத்தி அரசு ஊழியர் சங்கம் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

**பொ**ங்கல் போனஸ் வழங்க வலியுறுத்தி தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் தருமபுரி மாவட்டம் முழுவதும் வட்டார வளர்ச்சி அலுவலகம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பு கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழக அரசு ஊழியர்களுக்கு போனஸ் வழங்க மறுத்த நிலையில் தொடர்ச்சியான போராட்டங்கள் மூலமாக கடந்த 30,ஆண்டுகளாக பொங்கல் திருநாளை கொண்டாட போனஸ் மற்றும் ஏ, பி பிரிவினருக்கும், சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களும் கருணை தொகை




பெற்று வருகின்றனர்.

மத்திய அரசு போனஸ் சட்டத்தை திருத்தி அதன் அடிப்படையில் 2015ஆம் ஆண்டு முதல் 7 ஆயிரம் போனஸ் வழங்கிவரும் போது தமிழக




அரசு ஊழியர்களுக்கும் மாற்றம் செய்து போனஸ் வழங்க வலியுறுத்தி போராடி வந்த நிலையில் கடந்த ஆண்டு ஏ, பி பிரிவினருக்கு வழங்கப் பட்ட போனஸ் மறுக்கப்பட்டுள்ளது.

எனவே தமிழக அரசு அனைத்து பிரிவு




ஊழியர்களுக்கும் உச்சவரம்பின்றி ஒருமாத ஊதியத்தை போனசாக வழங்க வேண்டும். ஏ, பி பிரிவினருக்கு ரூ. 3 ஆயிரம் கருணைத் தொகை வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.

தருமபுரி நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்துக்கு மோகன் ,அரசு மருத்துவக் கல்லூரியில் வட்டத் தலைவர் சிவமணி, தருமபுரி வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜாகிர்உசேன், வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் மாவட்டப் பொருளாளர் கே.புகழேந்தி மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். துறைவாரி சங்கங்களின் நிர்வாகிகள் வாழ்த்தி பேசினர்.

நல்லம்பள்ளி வட்ட செயலாளர் பிரபாகரன், அரூரில் வட்ட செயலாளர் அழகிரி, பாப்பிரெட்டிபட்டியில் வட்ட தலைவர் சண்முகம்,பென்னாகரத்தில் வட்ட தலைவர் திம்மராயன், காரிமங்கலத்தில் வட்ட தலைவர் பி.நாகராஜ், பாலக்கோட்டில் வட்ட தலைவர் குணசேகரன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட் டங்களில் ஏராளமான அரசு ஊழியர்கள் பங்கேற்றனர்.

# காலவரையற்ற வேலை நிறுத்தமும் பெண்களின் பங்கேற்பும்

“மாகாளி பராசக்தி
ருஷ்ய நாட்டிலே கடைக்கண் வைத்தாள்
அங்கே ஓகோவென்று எழுந்தது பார்
யுகப் புரட்சி”

- புரட்சிக் கவிஞன் பாரதி

இந்தக் கூற்றை உண்மையாக்கும் வகையில் மீண்டும் வரலாறு படைக்க துவங்க ஜாக்டோ-ஜியோவின் காலவரையற்ற வேலை நிறுத்தம் ஏதோ ஒரே நாளில் துவங்கி நடப்பதாகவும், பெண் அரசு ஊழியர்களும், பெண் ஆசிரியர்களும் வேறு வேலையே இல்லாமல் போராட்டக் களத்தில் நிற்பதாகவும் ஒரு சில ஊடகங்களும் - பத்திரிகைகளும் - சட்டப் பஞ்சாயத்துகளும் சித்தரிப்பதை போல் அல்லாமல் தமிழகத்தின் மறைந்த முதல்வர் ஜெயலலிதா அவர்கள் 2011 சட்டமன்றத் தேர்தலின்போது 2016 சட்டமன்றத் தேர்தலின் போதும் தேர்தல் பிரச்சார கூட்டங்களில் பொதுமக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஏராளமான வாக்குறுதிகளை வழங்கினார். “அரசு ஊழியர்களை பொறுத்தவரை புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்படும்” தொகுப்பூதிய முறை ஒழிக்கப்பட்டு அனைவருக்கும் முறையான காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஆனால் அந்த வாக்குறுதிகள் எதுவும் கண்டுகொள்ளப்படவே இல்லை. அனைத்தும் காற்றில் பறக்க விடப்பட்டன.

தமிழக அரசிடம் பேச்சுவார்த்தைக்கு முயன்றும் தமிழக அரசு பேச முன்வராத நிலையில் 10.2.2016 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் தமிழநாடு அரசு ஊழியர் சங்கமும் அதனுடன் இணைந்த சங்கங்களும் இணைந்து துவங்கியது. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பலமுறை அலுவலகங்கள் இழுத்து பூட்டப்பட்டன. வேலை நிறுத்தம் முழு வீச்சில் துவங்கியுள்ளது என்ற செய்திகள் ஊடகங்களில் வந்து கொண்டிருந்தது. முதல் நாள் லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக இருந்த நிலை, இரண்டாம் நாள் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டோர் எழுச்சியோடு பங்கேற்றதாக மாறி வேலை நிறுத்தப் போராட்டம் உச்ச நிலையை அடைந்தது.

அப்படிப்பட்ட எழுச்சி ஒரே நாளில் ஏற்பட்டதல்ல. ஏறக்குறைய நான்கரை ஆண்டுகள் ஒவ்வொரு அரசு ஊழியனும் தன் நெஞ்சுக் கூட்டில் அடைகாத்து வைத்திருந்த ஆவேச உணர்வுகளே அக்கினிக் குஞ்சுகளாய் அன்று பிரசவித்தன என்றால் அது மிகையல்ல. 2016 ஜனவரி 22 அன்று நடைபெற்ற பெருந்திரள் முறையீடு போராட்டத்திற்கு பிறகும் அரசு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகளை அழைத்து பேசவே இல்லை. தமிழக அரசின் இத்தகைய உதாசீனப்படுத்தும் மனோபாவம் தான் அரசு ஊழியர்களை காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு தள்ளியது. எனவேதான் 10.2.2016 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் துவங்கியது.

### அரசுடன் பேச்சுவார்த்தை

இப்போராட்டத்திற்கான தயாரிப்பு பணிகள் மாநிலம் முழுவதும் நடைபெற்று வந்த நிலையில் தமிழக அரசு, சங்கங்களோடு பேச்சுவார்த்தை என்ற நாடகங்களை அரங்கேற்றியது. அதன்படி 7.2.2016 முதல் பல்வேறு துறை சங்கங்களையும் போராட்டம் அறிவிக்காத பொது சங்கங்களையும் இதை ஆசிரியர் அமைப்புகளையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. அந்த பேச்சுவார்த்தையில் அச்சங்கங்களின் கோரிக்கைகளை பற்றி கேட்பதற்கு மாறாக 10.2.2016 முதல் நடைபெறவுள்ள காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் பங்கேற்பீர்களா? என்பது மட்டுமே பிரதான கேள்வியாக இருந்தது. இப்பேச்சுவார்த்தையில் தற்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அவர்களும், தற்போதைய துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ் அவர்களும் முக்கியஸ்தர்களான பங்கேற்றதை தற்போது நினைவு கூற கடமைப்பட்டுள்ளோம்.

அப்போதே மிகத் தெளிவாக எங்கள் துறை சார்ந்த கோரிக்கைகள் பற்றி எங்களோடு



பேசுங்கள், காலவரையற்ற வேலை நிறுத்தம் குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை அழைத்து பேசுங்கள். நாங்களும் அப்போராட்டத்தில் பங்கேற்கவுள்ளோம் என்று கம்பீரமாக நெஞ்சுறுதியோடு எடுத்துக் கூறினார்கள் அனைத்து துறையின் தலைவர்களும் என்பதை பெருமையோடு பதிவு செய்ய கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் எப்போதும் ஊதியத்திற்காக போராடுகிறார்கள். அரசின் வருவாயில் 90%க்கும் மேலாக அரசு ஊழியர்கள் - ஆசிரியர்களின் ஊதியத்திற்காகவே சென்று விடுகிறது என்று ஒரு தவறான பிரச்சாரமும் அரசாலேயே மேற்கொள்ளப்பட்டது. இந்த அரசின் நிதிநிலை அறிக்கையில் ஒட்டுமொத்த செலவாக ரூ.1,47,583,25 கோடி என்றும் இதில் அரசு ஊழியர் ஆசிரியர்களின் ஊதியம் மற்றும் கல்வி மானியம் இவற்றுக்கான செலவாக ரூ.40,100,38 கோடி கல்வி மானியம் நிதி ஒதுக்கீடு 30 ஆயிரம் கோடி கழித்து மீதி தொகை கணக்கிட்டால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஊதியத்திற்கு ஆகும் செலவு ரூ.10 ஆயிரம் கோடி மட்டுமே என்ற நிலையில் முதல்வர், சட்டமன்ற உறுப்பினர்களும் இதில்தான் உள்ளடக்கம் என்பதையும் அரசுக்கும், பொதுமக்களுக்கும் நாம் புரிய வைக்க வேண்டிய சூழல் உள்ளது.

அரசின் தவறான அணுகுமுறையால் ஏற்பட்ட எழுச்சியே அன்றும் போராட்டத்தை தீவிரமாக்கியது. ஆசிரியர்களின் பங்கேற்பால் போராட்டம் வீச்சு பெற்றது. “அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் தமிழக அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டதோடு, அனைத்து மாநிலங்களிலும் ஆதரவு இயக்கங்கள் நடத்திடவும் அன்றும் அறைகூவல் விடுவிக்கப்பட்டது.”

## அரசை கலங்க வைத்த காத்திருப்புப் போராட்டம்

18.2.2016 அன்று மிகுந்த எழுச்சியோடு மாநிலம் முழுவதும் இந்த காத்திருப்புப் போராட்டம் துவங்கியது. ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் பேரணியாக மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை நோக்கி சென்றனர். காவல் துறை மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை இழுத்து பூட்டியது. ஆவேசத்துடன் சென்ற

ஊழியர்கள் கதவுகளை உடைத்துக் கொண்டு உள்ளே சென்று காத்திருக்கும் போராட்டத்தை துவங்கிய நிகழ்வுகளும் அரங்கேறியது. காலையில் துவங்கிய இப்போராட்டக் களம் ஒரு தொழிற்சங்க பயிற்சி பட்டறையாக இரவும் நீடித்து மறுநாளும் தொடர்ந்தது. காத்திருக்கும் போராட்ட பந்தலில் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் தொடங்கி அலுவலக உதவியாளர்கள், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்கள், பொது சுகாதாரத் துறை ஊழியர்கள் அனைவரும் இரவு முழுவதும் காத்திருந்து வர்க்க ஒற்றுமையை உறுதியப்படுத்தியதாக இருந்தது. இப்போராட்டம் ஏற்படுத்திய தாக்கத்தினால் 19.2.2016 அன்று மறைந்ததமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை விதி எண்.110-ன்கீழ் அரசாணைகளை வெளியிட நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. ஆகையால் தற்போது நாம் வைத்து போராடும் 9 அம்ச கோரிக்கை ஆட்சியர்களுக்கு புதிதல்ல. அவர்கள் ஏற்றுக்கொண்ட கோரிக்கைதான். இன்று களத்தில் இருந்து லட்சக்கணக்கான பெண் ஊழியர்கள் அன்றும் போராட்டத்தை எவ்வித அடக்குமுறைக்கும் அஞ்சாமல் தலைமையேற்று நடத்தியது நமக்கு கிடைத்த வெற்றியாகும்.

## ஜாக்டோ-ஜியோ

கடந்த 7.9.2017ல் தொடங்கிய ஜாக்டோ-ஜியோவின் காலவரையற்ற வேலைநிறுத்தம் நீதிமன்ற தடையை மீறி மேற்சொன்ன கள அனுபவத்துடன் ஊழியர்கள் பல லட்சக் கணக்கில் திரண்டதால் இரவு பகலாக பெண் ஊழியர்களும், பெண் ஆசிரியர்களும் போராட்டக் களத்தில் அடக்குமுறைகளுக்கு அஞ்சாமல் நின்றதால் மதுரை உயர்நீதிமன்ற கிளை 15.9.2017-க்குள் தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதிய மாற்றம் அறிவிக்க வேண்டும். இல்லையேல் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும். இந்த கண்டிப் பான உத்தரவுக்கு பின்னரே 11.10.2017 அன்று தமிழக அரசு ஊதிய மாற்றத்தை அறிவித்தது. 21 மாத கால தாமதத்திற்கு பிறகு அறிவிக்கப்பட்ட ஊதிய மாற்றத்தில் முரண்பாடுகளும், குளறுபடி களும் நிறைந்துள்ளதை சுட்டிக்காட்டியும் நவம்பர் 2017-க்குள் புதிய ஓய்வூதிய திட்டம் தொடர்பாக திரு.ஸ்ரீதர் ஐஏஎஸ் தலைமையில் வல்லுநர் குழு புதிய ஓய்வூதிய திட்டத்தை திரும்பப் பெறுவது குறித்து தமிழக அரசு முடிவு செய்யும் என்று அரசு தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தலைமைச் செயலாளர் திருமதி கிரிஜா வைத்தியநாதன் முன்னிலையில்தான் உறுதிமொழி அளித்தார். ஆனால் பலமுறை வாய்தா, தலைமைச் செயலாளர் நீதிமன்றத்திற்கு வருவதற்கு மறுப்பு, ஜாக்டோ-ஜியோவுடன் தமிழக அரசு பேசுவதற்கு மறுப்பு, சந்திப்புகளுக்கு மறுப்பு என்ற சூழலிலும் நீதிமன்றத்தில் போராடுவதற்கு தடையில்லை என்ற சூழலிலும் வேறு வழியின்றி கடந்த 22.1.2019 முதல் நமது காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை ஜாக்டோ-ஜியோ அறிவித்து துவங்கினோம்.

இளைஞர்களின் வேலை வாய்ப்பை பறிக்கின்ற அரசாணை 56ஐ ரத்து செய்திடவும், அரசாணை எண்.100, 101-ஐ ரத்து செய்திடவும் கோரிககைகளுடன் போராட்டக் களத்தில் கடந்த கால போராட்ட கள அனுபவத்தை காட்டிலும் கூடுதல் எழுச்சியுடன் மாநிலம் முழுவதும் முதல் நாளான 22.1.2019 முதல் நாளிலேயே வட்டத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம். ஒவ்வொரு தாலுக்காவிலும் குறைந்தது 500-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் இதில் 85 சதம் பெண் ஆசிரியர்களும், அரசு ஊழியர்களும் என்ற பதிவு அரசை கலங்க வைத்தது. 2ஆம் நாள் தாலுக்காவின் மறியல் எண்ணிக்கை குறைய வில்லை. மறியல் செய்தால் கைதாவோம் என பெண்களுக்கும் தெரியும். கூடுதல் எண்ணிக்கை யில் பங்கேற்ற பெண்களை கட்டுப்படுத்த இயலாத நிலையில் தமிழக அரசு தவித்தது. தலைமைச் செயலாளரின் சம்பள பிடித்தம், ஒழுங்கு நடவடிக்கை என பல அச்சுறுத்தல்களும் ஜாக்டோ-ஜியோவில் பங்கேற்றுள்ள பெண் களுக்கு கூடுதல் கோபத்தை வரவழைத்தது.

தமிழக அரசு அழைத்து பேசுவதற்கு பதிலாக பெண்களை இரவு நீண்ட நேரம் சிறையில் காக்க வைப்பது என்ற முடிவு செய்தும், எண்ணிக்கை கூடிக்கொண்டே போனது. பெண் ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் குடும்ப திருவிழாவிற்கு சுற்றத்தாருடன் இருப்பது போல் மகிழ்வுடன் பங்கேற்ற நிகழ்வு அரசை கலங்க வைத்தது.

மூன்றாம் நாள் மாவட்ட அளவில் மறியல் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது 5000-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் பங்கேற்றனர். தமிழக அரசு தன் குரூரத்தை வெளிப்படுத்தத் துவங்கியது. சில ஊடகங்களும் சில பத்திரிகைகளும் பொது

மக்களையும், மாணவர்களையும் தூண்டி விட்டது. கட்ட பஞ்சாயத்துகள் கட்ட சட்ட பஞ்சாயத்தாக செயல்பட்டது. இரவு 8 மணியை கடந்த நிலையில் விடுவிக்கப்பட்டாலும் அனைத்து பெண் ஊழியர்களும் ஆண் ஊழியர் களை காட்டிலும் உற்சாகத்துடன் 9 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற தொடர் களத்தில் இருந்ததை ஏற்றுக்கொள்ள முடியாத தமிழக அரசு காட்டு தர்பாரை நடத்தியது.

25.1.2019 வெள்ளியன்று அனைத்து மாவட்டத்திலும் கைது படலம் துவங்க காவல் துறையை ஏவிவிட்டு வன்மங்களை தூண்டியது. ஆனால் இந்த கள அனுபவத்தில் ஆண் ஊழியர்கள் கைது செய்ய விட மாட்டோம். பெண்கள் முதலில் செல்ல மாட்டோம். ஆண்களை விடுதலை செய்தால் மட்டுமே பெண்களும் செல்வோம் என்ற கோஷமும், ஆண் ஊழியர்களை தங்களது பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டுவந்து அரசு கையாலாகாத நிலையில் இரவு 10 மணி முதல் விடியற்காலை 2 மணி என நீடித்து தலைவர்களை கைது செய்யும் நிலை மாறி பஸ்சிலும், வழியிலும், வீட்டிலும் இரவு நேரத்தில் கைது செய்த தனது வக்கிரத்தை தீர்த்துக் கொண்டது. கைது செய்யப்பட்டவர்கள் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டனர்.

தருமபுரி மாவட்டம் கூட்டுறவுத் துறை பழனியம்மாள் முதன்முதலில் 7 மணிக்கு மேல் வீட்டில் கைது செய்யப்பட்டார். 28.1.2019 திங்களன்று நடைபெற்ற மாவட்ட மறியலை முறியடிக்கும் விதத்தில் மறியலில் பங்கேற்ற வர்களை தமிழகம் முழுவதும் பல்வேறு மண்டபங்களில் அடைத்து வைக்கப்பட்டு காவல் துறை காட்டுமிராண்டித்தனத்தை ஏவியது.

நீலகிரி மாவட்டத்தில் வீறுகொண்டெழுந்த பெண்கள் காவல் துறையின் தாக்குதலுக்கு உள்ளனார்கள். அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டாலும் தலைமைச் செயலக ஊழியர்களும், நீதித்துறை ஊழியர்களும், காவல் துறை அமைச்சுப் பணியாளர்களும் இணைந்ததால் அத்துறையின் பெண் ஊழியர்கள் வீராவேசத் துடன் போராட்டங்களில் பங்கேற்றதால் செய்வதறியாத தமிழக அரசு தற்காலிக ஆசிரியர் நியமனம், பணிக்கு திரும்பவில்லையெனிறல் அப்பணியிடத்திற்கு புதிய நியமனம், அப் பணியிடம் காலி பணியிடமாக கருதி நியமனம் என்ற நிலையில் பெண் ஆசிரியர்கள் மனசோர்வு நிலைக்கு தள்ளப்பட்டதும், பெண்கள் அச்ச மடைந்த சூழல் ஏற்பட்டது. அரசாணை 56ஐ ரத்து செய்யக்கோரி போராடிய ஜாக்டோ-ஜியோவுக்கு ஆதரவாக கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் தன்னெழுச்சியாக போராட்டம் நடத்தினர். அவர்களை காவல் துறை கைது செய்வது என்ற நிலையிலும் தொழிற்சங்கங்கள் ஆதரவு இயக்கங்கள், எதிர்க்கட்சிகளின் போராட்ட ஆதரவு என்ற நிலையிலும் கூடுதலாக அடக்குமுறையை ஏவிய நிலையிலும் வீரம் செறிந்த போராட்டத்தை பெண்கள் பங்கேற் பினால் தமிழக அரசுக்கு நெருக்கடி உண்டாக்கி யுள்ளது.

எப்போதும் இல்லாத நிலையில் காவல் துறை அதிகாரிகள் ஒரு சில மாவட்டங்களில் பெண் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மிகவும் அவமானப்படுத்தியும், கேவலமான வார்த்தை களை பிரயோகப்படுத்தியும் அடக்க நினைத் தார்கள். எதற்கும் அஞ்சாமல் ஆணுக்கு பெண் சரி நிகர் சமமே என்று உத்வேகத்துடன் நமது காலவரையற்ற வேலை நிறுத்தம் நடந்துள்ளது. எப்போதும் இல்லாத அளவு கைது செய்யப்பட்ட ஊழியர்கள் மீது கொலை முயற்சி உட்பட பல பிரிவுகளில் வழக்குள் பதிவு செய்து தனது வக்கிரத்தை தமிழக அரசு தீர்த்துக் கொண்டுள்ளது.

போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டாலும் ஊழியர்களை பணியில் சேரவிடாமலும், பணியிடங்கள் மறுப்பாளும் இன்றைக்கும் நாங்கள் அலைகழிக்கப்பட்டாலும் இந்த சோதனைகள் எங்களுக்கு தற்காலிகமே. இப்போதும் நாங்களே வென்றுள்ளோம். எதிர்கால களப் போராளிகள் மூலம்.

“இடிப்பாரை இல்லா ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும்” என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப நாங்கள் 1988-ஐயும், 2003-ஐயும், 2016-ஐயும், 2017-ஐயும் நெஞ்சிலேந்தி தங்களுக்கு 2004-ஐ போல் பாடம் புகட்டவும், எங்கள் தோழர்களை பாதுகாத்து மீட்டிடவும் மீண்டும் களம் காணவும் “பகையை முடிக்கும் பணிக்காக” நெஞ்சு கூட்டிற்குள் கனன்று கொண்டிருக் கிறோம். இறுதியில் நாங்களே வெல்வோம். இது சர்வ நிச்சயம். இப்படை தோற்கின் எப்படை வெல்லும்.

**- எஸ்.தமிழ்செல்வி**

# எங்கள் மாணவக் கண்மணியே!

*ஜாக்டோ - ஜியோ போராட்டக் களத்தில் நின்ற வல்லம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி முதுகலை தமிழாசிரியை மனம் திறந்த மடலாக தனது மாணவர்களுக்கு எழுதிய எழுச்சியும் உருக்கமும் நிறைந்த கவிதை*

எங்கள் மாணவக் கண்மணியே!
எப்படியிருக்கிறாய்?
எட்டுநாட்களாய்
எங்களைப் பார்க்காமல்
எப்படியிருக்கிறது பொழுது?

முதல்நாள்
எங்களின் வராமையைக்
கொண்டாடியிருப்பாய்!
அடுத்தநாள்
கவலை கருக்கொள்ள
கண்கள் எங்களைத்
தேடியிருக்கும்!

'செய்முறைத் தேர்வின் வாயிலில்
நிற்கிறோமே
வழக்கம் போல்
கைப்பிடித்து
அழைத்துப் போகாமல்
காலடியில் அமர்த்தி
சொல்லித் தராமல்
எங்கே போய்விட்டார்கள் இவர்கள்?

'மூன்றாம் நாள்
எங்கள் மேல் கோபம்
கொப்பளித்திருக்கும்!
நான்காம் நாள்
தேர்வுபயம் வந்து
கலங்கியிருப்பாய்!
நாங்கள் வந்துவிட
மாட்டோமா? என்று
ஏங்கியிருப்பாய்!
'வாங்குற சம்பளம் பத்தலேன்னு
வரிசைகட்டி
நிக்கிறதப் பாரேன்!'
புரியாமையில்
எங்கள்மேல் வந்துவிழும்
குப்பைப் பேச்சுகளைக்
கேட்டு குழம்பியிருப்பாய்!
எங்கள் கண்மணியே!
யார் என்ன சொன்னாலும்
சொல்லட்டும்!
பணத்திற்காக அலையும்
பதர்களல்ல நாங்கள்
என்பதை அறிவாய் நீ!
ஆனாலும் சிலவற்றைச்
சொல்லியாக வேண்டும்
உன்னிடம்!
அதற்குத்தான்
இந்த மடல்!
நாங்கள் சம்பளத்திற்காகப்
போராடவில்லை!
உனக்கும் சேர்த்துநம்
உரிமைகளுக்காகப்
போராடுகிறோம்!
ஐம்பத்தெட்டு வயதுவரை
அரசிற்குக் குருதியிரைத்து விட்டு
அறுபதுவயதில்
அகதியாய் அடுத்தவனிடம்
கையேந்தி நிற்கும்நிலை
எங்களுக்கும்
எங்களுக்குப் பிறகு
உங்களுக்கும்
வந்துவிடக் கூடாது
என்பதற்காகப் போராடுகிறோம்!
ஏழைக் குழந்தைகளின்
இரண்டாவது தாயாய்
இருந்து பசியாற்றும்
சத்துணவுக்கூடங்கள்
எண்ணிக்கையில் குறைந்து
இறந்துவிடக் கூடாது
என்கின்ற பயத்தில்தான்
இறங்கிவந்து போராடுகிறோம்!
ஆள்வோர்க்கு ஒரு நீதி
அலுவலர்க்கு ஒரு நீதி
என்ற ஓரவஞ்சனையை
ஓரங்கட்டுவதற்குத்தான்
ஓடிவந்து போராடுகிறோம்!
அங்கன்வாடிகளில்
மட்டுமே
நிகழ்ந்துகொண்டிருக்கும்
அன்னைத் தமிழ்வழி
ஆரம்பக் கல்வியையும்
அறுத்தெறிய நினைக்கும்
ஆதிக்கமூளைகளின்
அகோரமுகம் கிழித்து
அறம் கேட்டுப்
போராடுகிறோம்!
அறிவை, அறத்தை
உழைப்பை, உண்மையை
மதிக்கத் தெரியாத
ஒரு மண்ணாங்கட்டி

அரசின்கீழ்
எங்களைப் போலவே
உரிமைகள் மறுக்கப்பட்டு
நீயும் கிடந்துவிடக்கூடாது
என்பதற்காகவே போராடுகிறோம்!
நேற்றுவரை
வரம் கொடுக்கும்
தேவதைகளாக
வகுப்பில் உங்கள்முன்
நின்ற நாங்கள்
மறுக்கப்பட்ட உரிமைகளுக்காக
மல்லுக்கட்டி நிற்கிறோம் வீதிகளில்!
காலையில் மறியல்!
மதியம் கைது!
இரவில் விடுதலை!
இதுதான் எங்களின்
ஒரு வார வாழ்க்கை!
எப்படியாவது உன்
திருப்புதல்தாளைத்
திருத்திவிட வேண்டுமென்று
அங்குமிங்கும்
தூக்கிக் கொண்டு
அலைகிறோம்
கங்காருக்குட்டியைப் போல்!
பிறந்தவீட்டுப் பாசத்தை
மனம் நிறையச் சுமந்து
புகுந்த வீட்டில்
அடைபட்டுக் கிடக்கும்
பெண்ணைப் போல
தினம் தினம்
உன் முகத்தை நினைத்துக் கொண்டே
கைதாகி மண்டபங்களில்
அடைபட்டுக் கிடக்கிறோம் நாங்கள்!
நல்லவேளை
பாடம் முடித்துவிட்டோம்!
ஓரளவு படிக்க வைத்துவிட்டோம்!
செய்முறை திருத்திவிட்டோம்!
அகமதிப்பெண் போட்டுவிட்டோம்!
பேருந்துஅட்டை
கொடுத்து விட்டோம்!
மிதிவண்டிக் கணக்கு
முடித்துவிட்டோம்!
சாதிச்சான்று வருமானச் சான்று
பிறப்புச் சான்று
வாங்கிவிட்டோம்!
ஆதார்எண் ஏற்றிவிட்டோம்!
எம்மீஸ்எண் ஏற்றிவிட்டோம்!
வங்கிக் கணக்குநகல்
வாங்கிவிட்டோம்!
பொதுத் தேர்விற்கு
உன் விடைத்தாள்
முகப்புச்சீட்டிற்கு
அத்தனையும் சரிபார்த்து பதிவேற்றம்
செய்து விட்டோம்!
ஆனாலும்
எங்கள் காலடியில்
அமர்ந்து
கரையேறத் தினறும்
கண்மணிகளை
நினைத்துத்தான்
கவலையாக இருக்கிறது!
எங்கள்
மாணவக் கதிரே!
அவ்வப்போது மூர்ச்சையாகும் அனிதா...
அரட்டைக் கச்சேரி வனிதா...
கவலைக்கிடமாய் கவிதா...
கரையேறத் தினறும்
கனிமொழி...
இப்படி எல்லோரையும்
அடையாளம் காட்டிவிட்டுத்தான்
வந்திருக்கிறோம்
பயிற்சி ஆசிரியர்களிடம்!
ஊருக்குச் சென்ற தாய்
திரும்பி வரும் வரை
பக்கத்து வீட்டில்
பணிவாய் இருக்கும்
பிள்ளையைப் போல்
பணிவாய் இருந்து
படித்துக் கொள்
பயிற்சியாசிரியர்களிடம்!
உன் சேட்டைகளைக் காட்டி
அவர்களை
பயமுறுத்திவிடாதே!
இவையெல்லாம்
உனக்குப் புரியாவிட்டாலும்
உன் ஆசிரியத் தாய்கள்
உனக்குத் தீங்கு
செய்யமாட்டார்கள்
என்பதை மட்டும்
திடமாய் நம்பு!
நம்முடைய
இந்தப் பிரிவும்
ஒரு நல்லதுக்கு என்றே
நினைத்துக் கொள்வோம்!
நாங்களின்றி
நீ இயங்க
கற்றுக் கொள்!
கைது செய்யப் படாத
மாலை நேரங்களில்
உன்னை ஆயத்தப்படுத்த
மாறி மாறி வருவோம்!
அதுவரை காத்திருப்பாய்
எங்கள் கண்மணியே!

நன்றி : தீக்கதிர் நாளிதழ்

# ஆசிரியர்களின் பணி கற்பித்தல் மட்டுமா?

தமிழகத்தில் தற்போது நடந்து முடிந்த ஜாக்டோ - ஜியோவின் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் தமிழக முதல்வர் ,எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் இதர அரசியல் கட்சிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்கவும் முக்கியமாக மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கக் கூடிய பனிரெண்டாம், பதினொன் றாம் மற்றும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வின் செய்முறைத் தேர்வுகள் தொடங்க இருப்பதால் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. இதே ஜனவரியில் நடந்த ஜல்லிக்கட்டு பே

ாராட்டம் இளைஞர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ,திரளான பெண்கள் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் சாலை மறியல் ஆர்ப்பாட்டம் என்று முன்னெடுத்து குறிப்பாக சென்னை மெரினா போராட்டம் உலக கவனத்தை ஈர்த்தது மட்டுமல்லாமல் பண்பாட்டு செயல் பாட்டுக்கு தமிழக மக்கள் இவ்வளவு முக்கியத் துவம் கொடுத்ததும் அச்சு ஊடகங்களும் மின்னணு ஊடகங்களும் மக்களின் எழுச்சியை வெளிக் கொணர்ந்து உலகமெல்லாம் வாழ்கின்ற தமிழர்களை இப் போராட்டம் ஒன்றிணைத்தது.

பிறகு அது தமிழக சட்டபேரவையின் சட்டத்தின் மூலம் முடிவுக்கு வந்தது. ஆனால் அதே ஜனவரியில் தொடங்கப்பட்ட ஜாக் டோ-ஜியோ போராட்டம் தமிழகத்தின் ஒட்டு மொத்த ஆசிரியர்களின் அரசு ஊழியர்களின் நீண்ட கால கோரிக்கையை முன்னிறுத்தியே குறிப்பாக தமிழக அரசு ஏற்கனவே ஏற்றுக் கொண்ட 2016 பிப்ரவரி 19 அன்று அப்போதைய முதல்வர் ஜெயலலிதா தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் பழைய ஓய்தியத் திட்டத்தை கொண்டு வர நாங்கள் மறுபடியும் ஆட்சிக்கு வந்தால் அதற்கான குழுவை அமைத்து ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவேன் என்று அறிவித்தார். ஆனால் தற்போதைய போராட்டத்தின் போது அச்சு ஊடகங்களும் மின்னணு ஊடகங்கள் பெரும்பாலும் சமூக வலைத்தளங்களிலும் ஆசிரியர்களுக்கு எதிரான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆசிரியர்களுடைய குழந்தைகள் எங்கே படிக்கின்றனர்? அவர்களுக்கான ஊதியம் போதவில்லையா? அவர்கள் அப்படி என்ன கடுமையான பணி செய்கிறார்கள் போன்ற வாத பிரதி வாதங்கள் அனைத்து ஊடகங்களிலும் அரங்கேறின. ஆனால் கற்பித்தல் பணிக்கு மட்டுமே பணிக்கப்பட்ட ஆசிரியர்களின் பணி தற்போது

கல்வி ஆண்டு தொடக்கத்திற்கு முன்பாகவே அதாவது ஜூன் மாதத்திற்கு முன்பாக மே மாத கோடை விடுமுறையிலேயே மாணவர்களுக்கு வழங்க விலையில்லா பாட புத்தகங்களை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தங்கள் தோலிலே சுமந்து வண்டிகளில் ஏற்றி பள்ளிக்கு கொண்டு வந்து சேர்க்கின்றனர். இந்நிகழ்வு ஆண்டுதோறும் நடந்தேறிக் கொண்டு வருகின்றது.

ஒரே முறையில் அனைத்து புத்தகங்களும் வழங்க முடியாத சூழல் இருக்கும் போது ஜூன் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை வராத புத்தகங்களுக்கு பல முறை சென்று சுமந்து கொண்டு வர வேண்டியிருக்கிறது. அது போன்று விலையில்லா மிதிவண்டிகளை கொடுப்பதும் மிதிவண்டிகளை பாதுகாக்கப்பட்ட இடத்தி லிருந்து எடுத்து வந்து மாணவர்களிடம் வழங்குவதும் அப்பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும். இப்படி விலையில்லா மடிக்கணிணி, காலணி வழங்கு வதும் அதனை வழங்குவதற்கு முன்பாக பாதுகாப்பதும் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

இத்தனை செயல்பாடுகளும் அரசின் கட்டளைகளாகவே துறையின் ஆணைகளாக வலியுறுத்தப்பட்டு ஆசிரியர்கள் செய்வதில்லை. அரசுப் பள்ளிகள் காப்பாற்றப்பட வேண்டும் அங்கே கற்கும் ஏழை மாணவர்களுக்கு அரசு வழங்கும் அனைத்து விலையில்லா பொருட் களும் காலத்தே கிடைத்து பயன் பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்திலே தன்னுடைய ஒவ்வோரு கற்றல் கற்பித்தல் நாளையும் பள்ளியில் கழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்றைய சூழலில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பொதுத் தேர்வை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு ஒவ்வொரு வேலை நாளிலும் மாலை நேரங்களிலும் தேர்வு நேரங்களில் அப்பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொருளுதவியோடு இரவு



உணவளித்து அந்தந்த பாட ஆசிரியர்கள் இருந்து படிக்க வைத்து பிறகு மாணவர்களை வீட்டுக்கு அனுப்புகின்றனர். இவை அனைத்தும் யாருடைய அழுத்தம் இல்லாமலும் தன்னார்வத்தோடு அனைத்து ஆசிரியர்களும் ஈடுபடுகின்றனர்.

பள்ளியின் வளர்ச்சியில் அதன் கட்டமைப்பு முக்கிய இடம் பெறுகின்றது. பள்ளியின் வகுப்பறைக் கட்டிடங்கள், கழிப்பிடக் கட்டிடங்கள் ,நூலகக் கட்டிடங்கள், ஆய்வகக் கட்டிடங்கள் மற்றும் ஆண்டு தோறும் நடைபெறுகின்ற பராமரிப்புப் பணிகள் அனைத்து அப்பள்ளியின் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்களின் சுயநலமற்ற தன்னார்வ முயற்சிகள் மூலம் அரசு நிறுவனங்கள் மூலமாகவோ கொடைத் தன்மை கொண்ட கொடையாளர்கள் மூலமோ தொண்டு நிறுவனங்கள் மூலமோ நிறைவேற்றுகிறார்கள். இவை அனைத்தும் மாத ஊதியத்திற்காக ஆசிரியர்கள் செய்கிறார்களா? அல்லது அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணாக்கர்களுக்கு அனைத்து வசதியும் கிடைக்க வேண்டும் என்கின்ற நோக்கமா?

பல அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள் +2 வகுப்புப் பொதுத் தேர்வுக்குப் பின் மாணவர்களின் உயர்கல்விக்கு அவர்களின் முழு படிப்பு முடியும் வரை நிதி உதவி செய்து வருகின்றார்கள். எனக்குத் தெரிந்து ஒர் ஆசிரியர் சென்னைக்கு அருகேயுள்ள கிராமத்தில் ஒன்றிய நடுநிலைப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்த தன்னுடைய 2 3/4 ஏக்கர் நிலத்தை விற்று அதற்காக முன்பணத்தை செலுத்தி இருக்கின்றார். அதனுடைய தற்போதைய மதிப்பு 8 கோடி ரூபாய் ஆகும். உண்மை இப்படி இருக்க ஜாக்டோ-ஜியோ போராட்டத்தில் ஆசிரியர்களின் ஊதிய உயர்வு பற்றிய நோக்கமே உள்ளதாக ஊடகங்களும் பொதுச் சமூகமும் போராட்டத்தை மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தின. அரசாணை எண் : 56 என்பது தேவையற்ற பணியிடங்களை நீக்கி இனி வரும் காலிப் பணியிடங்களில் நிரந்தரமற்ற பணியிடங்களாக அவற்றை மாற்றுவதை எதிர்த்தும் எதிர் காலத்தில் இளைஞர்களுக்கான அரசு வேலை வாய்ப்பினை பறிப்பதை எதிர்த்தும் இக்கோரிக்கை சேர்க்கப்பட்டது.

## ஊடகங்கள் ஆண்டு தோறும் கவனிக்க வேண்டுகிறோம்

ஆசிரியர்கள் கல்வி ஆண்டு தொடக்கத்திலிருந்து இறுதி வரை மேற்கொள்கிற கற்பித்தல் பணி சாராத இதர பணிகளை கவனித்து தங்கள் ஊடகங்களில் வெளிக்கொணர்ந்து மக்களுக்கு தெரிவிக்க வேண்டுகிறோம். வங்கிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் போது மக்களுக்கு சிரமம் ஏற்பட்டாலும் வங்கி ஊழியர்களை மக்கள் பழிப்பதில்லை. போக்குவரத்து ஊழியர்கள் போராட்டத்தை முன்னெடுக்கும் போதும் மக்கள், ஊழியர்களை பழிப்பதில்லை. ஆகவே ஆசிரியர்களை எதிர்காலத்தில் பழிக்காமல் அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க ஊடகங்களின் பணி மகத்தானது.

இப்படிக்கு,

**செ.க.கு**

# "அக்கரை உள்ள பெற்றோரும் அலமாரி புத்தகங்களும்"

**நி**னைத்துப் பார்க்கிறேன். அன்று பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை பற்றி ஒருவர் வாசிக்க ஊர்மந்தையில் அமர்ந்து கொண்டு பெண்டு பெருசுகள் எல்லாம் செவி மடுத்த நாட்களையும், இன்று பிரபஞ்சப் பக்கங்களையே புரட்டி, புரட்சி வாசிக்க வைக்கும் கணினி தொழில்நுட்பத்தையும் நினைத்துப் பார்க்கிறேன்.

இருந்தபோதும் வாசிப்பின் நேசிப்பு எல்லா நெஞ்சங்களையும் வசீகரப்படுத்தவில்லை. எல்சிடி, எல்இடி டிவிக்களின் சின்னத்திரையில் சிறைபட்டுக் கிடக்கின்றன. அது மட்டும் அல்லாமல் அலைபேசியில் அனுதினமும் கண் தூக்கம் இல்லாமல் கடுகளவும் தேவையில்லாத வைகளை கல்லாக்கி சீரழிவு பாதையில் சிக்கிக் கொண்டு திசை மாறிச் செல்லும் மக்களை திசை திருப்பாமல், கணினி மூலமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வருங்கால வாழ்க்கை பற்றி சிந்திக்காமல் வாழ்ந்து வருகின்றார்கள் என்பது மட்டும் உண்மை.

ஆகையால் பெற்றோர்கள் வாசிப்பின் நேசிப்பை தனது குழந்தைகளின் வாழ்க்கை சிறப்பாக அமைவதற்கு கணினி படித்துக் கொண்டே வாசிப்பு பழக்கத்திற்கு கொண்டு வர வேண்டும். ஏனென்றால் எல்லா நெஞ்சங்களை யும் வாசிப்பு பழக்கம் வசீகரப்படுத்தவில்லை. எனவே அலமாரிகளில் அணிவகுத்திருக்கும் நூல்களின் படைகள் நூலாம் படைகளால் முலாம் பூசப்பட்டு அலமாரிகளில் அடைபட்டுக் கிடக்கின்றன. எனவே, பெற்றோர்கள் கணினி பார்க்க, படிக்க வைக்கும் அதே நேரத்தில் புத்தகம் படித்தால் வாசிக்க வாசிக்க யோசிக்க வைக்கும் என்ற கருத்தையும் புத்தகம் வாசிப்ப தற்கு குழந்தைகளிடம் கற்றுக்கொடுக்க வேண்டும்.

எழுதுவதன் மூலம் 6 சதவீத அறிவை பெருக்கிக் கொள்ளலாம்.

வாசிப்பதன் மூலம் 19 சதவீத அறிவை பெருக்கிக் கொள்ளலாம்.



பேசுவதன் மூலம் 30 சதவீத அறிவை பெருக்கிக் கொள்ளலாம்.

கவனிப்பதன் மூலம் 45 சதவீத அறிவை பெருக்கிக் கொள்ளலாம்.

ஆக 4 விதங்களில் நூறு சதவீத கருத்துக்களை தெரிந்து கொள்ளலாம் என்று குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்.

அந்தக் காலத்தில் எல்லார் வீட்டிலும் உலை கொதிப்பதற்காக குலை பட்டினியுடன் லண்டன் நூலகத்திற்குள் 33 வருடங்களாக வாசித்து, வாசித்து வறுமைக்கு மூலதனம் தந்தவன் **காரல் மார்க்ஸ்**. தூக்குக் கயிற்றின் தொண்டை நெறிபடும் முன்பு வரை வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் ஓரிரு பக்கங்களை முடிக்க கண்சாடையால் வாய்தா கேட்டவன் **பகத்சிங்**.

போர்க்காலத்தில் குண்டடிபட்ட கையில் அறுவை சிகிச்சை செய்ய மயக்க மருந்தின்றி மருத்துவர்கள் மருகியபோது மறு கையில் புத்தகம் வாசித்துக் கொண்டே அறுவை சிகிச்சையை அனுசரித்தவர் **முசோலினி**. வசியப்படுத்திய வாசிப்பு ஒட்டுமொத்த மனிதகுழமும் மனிதன் வாழ்வதற்காகவே வாசிப்பை நேசித்து வந்திருக்கின்றார்கள். எனவே, பெற்றோர்களாகிய நாமும் வாழ்க்கைக்கு வாசிப்பு அவசியம் என்று தனது குழந்தைகளிடம் வாசிப்பை நேசிக்க வையுங்கள்.

அதனால் எழ வைக்கும் எழுத்து, படைப்பு களின் பண்பு, சமூக அவலம் சாடும் போர்க்குணம், விரசமில்லா விவேகக் காதல், பிறன்மனை நோக்கா பேராண்மை, பெண்மை போற்றும் பன்முகத் தன்மை, வியர்வை சாதியின் விழிநீர் துடைக்கும் விரல்கள், வியர்வை வாசத்தை நுகர வைக்கும் வீரியம், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் என்று மத மாச்சரியங்கள் தாண்டி மனிதன் என்று மார் தட்டும் மமதை, மக்களிடம் கற்றதை மக்களுக்கு போதிக்கும் மாண்பு. இந்த உள்ளடக்கப் படைப்புகள் எல்லாம் புத்தகம் வாசிப்பால் புத்தியில் ஏறுவதற்கு அக்கரை உள்ள பெற்றோர்கள் அலமாரி புத்தகங்களை அவசியம் அன்பு குழந்தைகளுக்கு வாசிப்பை நேசிக்க வைத்து வாழ்க்கைக்கு உதவுங்கள். அதேவேளை யில் புத்தகம் வாசித்து வித்தகன் நானென்று வீராப்பு கொள்ளாமல் சமுதாய மாற்றத்திற்கு அதை சாராக ஊற்றுங்கள்.

மனிதர்களைப் போலவே புத்தகங்களுக்கும் இதயம் இருக்கின்றன.

சில புத்தகங்கள் உழைக்கச் சொல்லும்

சில புத்தகங்கள் முளைக்கச் சொல்லும்

சில புத்தகங்கள் அழச் சொல்லும்

சில புத்தகங்கள் காயப்படுத்தும்

சில புத்தகங்கள் காயத்திற்கு மருந்து தடவும்

சில புத்தகங்கள் வாழச் சொல்லும்

சில புத்தகங்கள் வாழ்ந்ததை சொல்லும்.

- **சி.அடைக்கண்**, மதுரை

---

# தருமபுரியில் அகில இந்திய வேலை நிறுத்தத்தை யொட்டி பொதுத்துறை நிறுவனங் களின் ஒருங்கிணைப்புகுழு, ஆர்ப்பாட்டம்




அகில இந்திய வேலை நிறுத்தத்தையெட்டி மத்திய மாநில மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில் தருமபுரி தொலைபேசி நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இன்சூரன்ஸ் ஊழியர் சங்க கோட்ட இணை செயலாளர் ஏ.மாதேஸ்வரன் தலைமை வகித்தார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் எம்.சுருளிநாதன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்செல்வி, மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்டத் துணைத் தலைவர் எம்.யோகராசு, தமிழ்நாடு நில அளவை அலுவலர் ஒன்றிப்பு மாநில துணைத் தலைவர் அண்ணாகுபேரன், மகளிர் துணைக் குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேனில், கூட்டுறவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எஸ்.பழனியம்மாள், சத்துணவு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன், ஊரக வளர்ச்சி துறை அலுவலர் சங்க மாவட்ட பொருளாளர் சங்கர், தொலை தொடர்பு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் டி.பாஸ்கர், ஒப்பந்த ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் சௌந்தரம், பொதுஇன்சூரன்ஸ் ஊழியர் சங்க தலைவர் கே.ஆர்.சக்கரவர்த்தி, இன்சூரன்ஸ் ஊழியர் கிளை செயலாளர் மகேந்திரன் ஆகியோர் பேசினர்.

பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். ஒப்பந்த தினக்கூலி மற்றும் புற ஆதார முறையில் பணியாற்றும் ஊழியர்கள், ஆசிரியர் பணிகளை வரன்முறைபடுத்தி, அனைத்து காலி பணியிடங்களையும் சட்டபூர்வமாக சட்டபூர்வ மாக நியமன விதிகள் படி நிரப்ப வேண்டும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்க வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கை களை வலியுறுத்தப்பட்டது.

# ஜாக்டோ-ஜியோ போராட்டத்திற்கு ஆதவு தெரிவித்து தமிழக அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாதர், வாலிபர், மாணவர் அமைப்புகள் வெளியிட்ட பத்திரிகை செய்திகள்

## முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி போராடும் ஜாக்டோ-ஜியோ கவுரவம் பார்க்காமல், உடனடியாக நேரடியாக அழைத்துப் பேச வேண்டும்

### தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை

போராடும் அரசு ஊழியர்களையும் - ஆசிரியர்களையும், கவுரவம் பார்க்காமல், உடனடியாக முதலமைச்சர் நேரடியாக அழைத்துப் பரிவுடன் பேசி, அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், இந்தப் போராட்டத்திற்கு நிரந்தரத் தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறேன்.

## தமிழக அரசின் நடவடிக்கையை கண்டித்து தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை - 28.1.2019

ஜாக்டோ -ஜியோ அமைப்பின் சார்பில் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் போராட்டம் ஒவ்வொரு நாளும் மிகவும் தீவிரமடைந்து வரும் நிலையில் மாணவர்களின் நலன் பற்றியோ, அறவழியில் போராடுவோரின் கோரிக்கைகள் பற்றியோ பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் செங்கோட்டையன் மற்றும் முதலமைச்சர் எடப்பாடி திரு பழனிசாமி ஆகியோர் கண்டு கொள்ளாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு அமைதி காப்பதும், அமைச்சர் திரு ஜெயக்குமார் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை கொச்சைப்படுத்தும் வகையில் முழுப்பக்க விளம்பரங்கள் கொடுத்து போராட்ட உணர்வை மேலும் தூண்டிவிடுவதும் மிகுந்த வேதனை அளிக்கிறது. அமைச்சர்களின் பொறுப்பற்ற செயல் மட்டுமின்றி, முதலமைச்சரின் பாராமுகம் இன்றைக்கு இந்த போராட்டத்தை இவ்வளவு தீவிரமாக்கியிருக்கிறது என்பது மிகவும் கவலைக்குரியது எனவும் தெரிவித்துள்ளார்.

## தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை - 30-01-2019"

அடாவடி அ.தி.மு.க அரசு அராஜகத்தையும், அதிகார ஆணவத்தையும் மட்டுமே நம்பியிருப்பதால் மாணவர்கள், மக்கள் நலன் கருதி போராட்டத்தை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று போராட்டக் களத்தில் இருக்கும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இதுநாள் வரை அறவழியில் போராடிய ஜாக்டோ - ஜியோ அமைப்பினர் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும் வரை பொறுமை காக்குமாறும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் கழக ஆட்சி அமைந்தவுடன் உரிய முறையில் நியாயமாகப் பரிசீலித்து நிறைவேற்றப்பட்டு, அ.தி.மு.க அரசின் பழிவாங்கும் நடவடிக்கைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு மனிதாபிமானம் போற்றப்படும் என்றும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

## இடதுசாரி கட்சிகள் கூட்டறிக்கை

பிப்ரவரி 1-ஆம் தேதி முதல் +2 மாணவர்களுக்கு பிராக்டிகல் தேர்வு தொடங்க உள்ளது. ஆசிரியர்கள் பணியில் இல்லை என்பது அவர்களுக்கு ஒரு பதட்டத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே, மாணவர்கள் மற்றும் பெற்றோரின் எதிர்பார்ப்பையும், நலனையும் கருத்தில் கொண்டு வேலைநிறுத்தத்தை ஒத்தி வைப்பதை பரிசீலிக்க வேண்டுமென்று ஜாக்டோ ஜியோ அமைப்பினருக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

## ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கோரிக்கைகளுக்கு தீர்வு காண்க!
## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழக அரசுக்கு வலியுறுத்தல்!!
## அடக்குமுறைகளை கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர சிபிஐ(எம்) வலியுறுத்தல்

*உடனடியாக ஜாக்டோ ஜியோ தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி போராடும் ஆசிரியர், அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு தீர்வு கண்டு மாணவர்களின் நலன்களை பாதுகாக்க முன்வருமாறு தமிழக அரசை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வலியுறுத்துகிறது.*

*தமிழக அரசின் இத்தகைய அடக்குமுறை நடவடிக்கைகளை கண்டித்து அனைத்துப் பகுதி பொதுமக்களும், ஜனநாயக இயக்கங்களும் கண்டனம் முழங்கிட வேண்டுமென மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக் கொள்கிறது.*

## அரசு ஊழியர்கள், அரசு பணியாளர்கள் - ஆசிரியர்கள் மீதான பழிவாங்கும் நடவடிக்கையை அரசு கைவிட வேண்டும்
## பணியிடை நீக்கம், கைது நடவடிக்கைகள் தீர்வாகாது
## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்
## ஜேக்டோ - ஜியோ தலைவர்களை விடுதலை செய்து
## உடனடி பேச்சுவார்த்தைக்கு அழைத்திடுக !

*ஜேக்டோ-ஜியோ பேரமைப்பின் சார்பில் 22.01.19 முதல் வேலை நிறுத்தம் மற்றும் மறியல் மிகுந்த எழுச்சியுடன், நடத்தப்பட்டு வருகிறது. பள்ளிகள் 100 சதவிகிதம் மூடப்பட்டுள்ளன. அரசு அலுவலகங்கள் இயங்கவில்லை.*

*தற்காலிக ஆசிரியர்களை நியமனம் செய்து மாணவர்களுக்கு பாடம் நடத்திட அரசு முயற்சி செய்வது பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவாது. எனவே, உடனடியாக போராட்டக்குழு தலைவர்களை, முதல்வர் அழைத்துப் பேசி விரைந்து தீர்வு காண்பது ஒன்றே, ஆசிரியர்கள் பள்ளிக்கு திரும்பி அரசு செய்முறைத் தேர்வுகளை நடத்திட உதவியாக அமையும்.*

*பத்து, பதினொன்று மற்றும் பனிரெண்டாம் வகுப்புகளுக்கான பொதுத் தேர்வு நடைபெறவுள்ள சூழலில் கல்வி நிலையங்கள் மூடப்பட்டு, மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வார காலமாக இந்நிலை நீடித்து வருவது மிகவும் கவலைக்குரியது.*

*பழிவாங்கல், அடக்குமுறை நடவடிக்கைகளை அரசு கைவிட்டு ஜாக்டோ, ஜியோ நிர்வாகிகளை, மாண்புமிகு முதலமைச்சர் நேரடியாக தலையிட்டு அழைத்துப் பேசி சுமூகத் தீர்வு காண வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம்.*

## அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுக!
## உடனடியாக அவர்களை அழைத்து பேசி பிரச்சனை தீர்வு காண்க.
## பழிவாங்கும் நடவடிக்கையை கைவிடுக
## வைகோ அறிக்கை

*அறப்போராட்டக் களத்தில் உள்ள அரசு ஊழியர்கள் - ஆசிரியர் சங்கங்களை அழைத்துப் பேசி, அவர்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற தமிழக அரசு முன்வரவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.*

## அரசு ஊழியர்களுடன் பேசி வேலைநிறுத்த போராட்டத்திற்கு தீர்வு காண வேண்டும்!

## அரசு ஊழியர் - ஆசிரியர்கள் போராட்டத்தை சிக்கலாக்கக் கூடாது: சுமூகத் தீர்வு தேவை!

## பா.ம.க. நிறுவனர் மருத்துவர் இராமதாசு அறிக்கை

தமிழகத்தில் 10, 11 மற்றும் 12-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு அடுத்த ஒரு மாதத்தில் பொதுத்தேர்வுகள் தொடங்கவுள்ளன. நிதியாண்டு முடிவடையவுள்ளதால் அரசு அலுவலகங்களிலும் ஏராளமான பணிகள் இருக்கும். இத்தகைய சூழலில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வேலைநிறுத்தம் நீடித்தால் அனைத்துத் தரப்பு மக்களும் கடுமையாக பாதிக்கப்படுவர். எனவே, அரசு ஊழியர்கள்- ஆசிரியர்கள் கூட்டமைப்பின் தலைவர்களை அரசு அழைத்துப் பேசி வேலைநிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர வேண்டும்.

## பா.ம.க. இளைஞரணித் தலைவர் அன்புமணி இராமதாஸ் அறிக்கை

## அரசும், ஊழியர்களும் விட்டுக் கொடுத்து போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருக!

தமிழக ஆட்சியாளர்களும் அதே நல்லெண்ண அடிப்படையில் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் மீது மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் ரத்து செய்ய வேண்டும். அதுமட்டுமின்றி, இரு தரப்புக்கும் ஏற்ற நாளில் பேச்சு நடத்தி சாத்தியமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்ற வேண்டும்.

## நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது

அரசு ஊழியர்கள் தங்களுக்கான உரிமையை கேட்டுத்தான் போராடி வருகின்றனர். அவர்கள் முன்வைத்திருக்கிற கோரிக்கைகள் நியாயமானது மட்டுமல்லாது அரசால் சாத்தியப்படுத்தக்கூடியதும்தான்! எனவே, புதிய ஓய்வூதியத் திட்டத்தால் பாதிக்கப்பட்டு நிற்கிற அரசு ஊழியர்களை மீட்பதற்குப் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துவதே உகந்ததாக இருக்கும்.

மேற்கு வங்கம், திரிபுரா போன்ற மாநிலங்களில் பழைய ஓய்வூதியத் திட்டத்தையே அம்மாநில அரசுகள் பின்பற்றி வருகின்றன. அதனைப் போல, தமிழக அரசும் பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தினாலேயே ஒழிய, இச்சிக்கலைத் தீர்க்க வேறு வழியில்லை. ஆகவே, ஜாக்டோ ஜியோ அமைப்பினருடன் உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும் எனத் தமிழக அரசை வலியுறுத்துகிறேன்.

## அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீது அடக்குமுறை நடவடிக்கையை கைவிடுக!

## தமிழக அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வலியுறுத்தல்

நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி வரும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை இடைநீக்கம் செய்வது, கைது செய்வது என்ற அடக்குமுறை நடவடிக்கைகளை தமிழக அரசு ஏவி வருகிறது. இதை விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

போராடி வரும் அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தார்மீக ஆதரவை தெரிவித்துக்கொள்கிறோம். அவர்கள் மீதான அடக்குமுறையை கைவிடுமாறு தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

## அடக்குமுறைகளைக் கைவிட்டு அரசு ஊழியர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துக! தமிழ்நாடு அரசுக்கு தமிழ்த்தேசியப் பேரியக்கப் பொதுச் செயலாளர் கி.வெங்கட்ராமன் கோரிக்கை!

தமிழ்நாடு அரசு, தனது அடக்குமுறைகளையும் பேச்சு வார்த்தை மறுப்புப் போக்கையும் கைவிட்டு, போராடும் கூட்டமைப்புகளுடன் உடனடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி சுமூகமான தீர்வு கண்டு போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென தமிழ்த்தேசியப் பேரியக்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

## ஜாக்டோ - ஜியோ தலைவர்களை அரசு அழைத்துப் பேச வேண்டும்! த.நா.அரசு டாஸ்மாக் பணியாளர் சங்கம் கோரிக்கை!

அரசு, பழிவாங்கும் நடவடிக்கைகளை கைவிடவேண்டும், சிறையிலடைக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய வேண்டும். தற்காலிக பணியிட நீக்கத்தை ரத்து செய்ய வேண்டும். போராட்டத் தலைவர்களுடன் சுமூக பேச்சுவார்த்தையினை உடடினயாக நடத்தி வேலை நிறுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவேண்டும் என தமிழநாடு அரசு டாஸ்மாக் பணியாளர் சங்க மாநிலத் தலைவர் ஏ.இ.பாலுச்சாமி தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஜாக்டோ ஜியோ போராட்டத்திற்கு ஜனநாயக மாதர் சங்கம் ஆதரவு

தமிழக அரசின் மிரட்டல்களை எல்லாம் தூள் தூளாக்கி வீரம் செறிந்த போராட்டத்தை நடத்தி வரும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களுக்கு ஜனநாயக மாதர் சங்கம் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான போராட்டத்திற்கு ஜனநாயக மாதர் சங்கம் முழு ஆதரவை தெரிவித்துக் கொள்ளுகிறது. மேலும் மாவட்டங்கள் தோறும் போராட்டத்திற்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டிட வேண்டும் எனவும் தமிழ் மாநிலக்குழு சார்பாக மாவட்டக் குழுக்களை கேட்டுக் கொள்ளுகிறோம்

## ஜாக்டோ-ஜியோ வேலைநிறுத்தம் வெல்லட்டும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் முழு ஆதரவு

9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி போராடி வரும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் போராட்டத்திற்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் முழு ஆதரவு அளிக்கிறது, பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனைக்கு சுமூகத் தீர்வு காண வேண்டும் தமிழ்நாடு மாநில குழு தமிழக அரசை வலியுறுத்துகிறது. இத்தகைய போராட்டத்திற்கு ஆதரவாக வாலிபர் சங்கத்தின் மாவட்டக் குழுக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திட கேட்டுக் கொள்கிறோம்.

## ஆசிரியர் மற்றும் அரசு ஊழியர்களுக்கு ஆதரவாக போராடிய மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தி கைது செய்துள்ளதை இந்திய மாணவர் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

தமிழகம் முழுவதும் கடந்த 8 நாட்களாக ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் அரசுத் துறையில் ஆட்குறைப்பு செய்யும் அரசாணை 56 மற்றும் புதிய பென்சன் திட்டதை இரத்து செய்ய கோரியும், காலிப்பணியிடங்களை நிரப்பக்கோரியும் 9 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தமிழக முழுவதும் இதுவரை 20 மாணவர்களை கைது செய்து வழக்கு பதிவு செய்துள்ளது. அதில் 6 மாணவர்களை ரிமெண்ட் செய்து சிறையில் தள்ளியுள்ளது. போராடும் ஆசிரியர்கள் மாணவர்கள் அழைத்து பேசாமல் ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கும் விதமாக தொடர் கைது நடவடிக்கையில் ஈடுபடும் தமிழக அரசை இந்திய மாணவர் சங்கம் மிகவும் வன்மையாக கண்டிக்கிறது.

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## நில அளவைத் துறை

நில அளவை பதிவேடுகள் துறையின் தனித்தன்மையை சீர்குலைக்கும் வருவாய்த் துறையின் உத்தரவை கைவிடக்கோரி தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு சார்பில் தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இணைய வழியில் விரைவு பட்டா திட்டத்தின் மூலம் மக்களுக்கு உடனுக்குடன் பட்டா வழங்க நகரம் உட்பட நிலம் சார்ந்த உட்பிரிவு பட்டா மாற்றங்கள் நில அளவை அலுவலர்களால் மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டு பின்னர் வட்டாட்சியரால் தனிபட்டா வழங்கப்படுகிறது.

இந்நிலையில் கிராம நிர்வாக அலுவலர் களின் பரிந்துரையை பெற்றபின் நில அளவை கண்காணிப்பாளர்களுக்கு செல்ல வேண்டும் என்கின்ற விதிக்கு புறம்பான கோரிக்கையை ஏற்று நில அளவைத்துறை இயக்குனருக்கு நடை முறைக்கு மாறான வழிகாட்டுதலை வருவாய்த் துறை பேரிடர் மேலாண்மை துறை செயலகம் அளித்துள்ளது.

இதனை கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத் திற்கு மாவட்டத் தலைவர் ஜாகிர் உசேன் தலைமை வகித்தார். மாநில துணைத் தலைவர் அண்ணாகுபேரன், மாவட்டச் செயலாளர் பெரியசாமி, பொருளாளர் கி.வெங்கடேசன், அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன், மாவட்டச் செயலாளர் ஏ.சேகர் பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட துணைத் தலைவர் எம்.யோகராசு ஆகியோர் கோரிக்கையை விளக்கிப் பேசினர்.

தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பின் நாகப்பட்டினம் மாவட்ட மையத்தின் சார்பில் 04.01.19 மாலை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்டத் தலைவர் எஸ்.இராமச்சந்திரன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர்



ஆர்.அருள்பிரகாசம் விளக்கவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் வாழ்த்துரை வழங்கினார். மாநிலத் தலைவர் ஆர்.காயாம்பு நிறைவுரையாற்றினார். சரக மற்றும் மாவட்ட நிர்வாகிகள் உரையாற்றினர். மாவட்ட துணைத் தலைவர் ஆர்.மனோஜ்குமார் நன்றி கூறினார்.

## எம்.ஆர்.பி. செவிலியர்கள்

நீதிமன்ற உத்தரவின் படி காலமுறை ஊதியம் வழங்கவேண்டும் என வலியுறுத்தி தமிழ்நாடு



எம்ஆர்பி செவிலியர்கள் மேம்பாட்டு சங்கம் சென்னை மாவட்டம் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு 10.1.2019 அன்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com